
www.tamilarangam.net

P. RAYA

RAYA
... UE DE COLOMBES
... IERES SUR -
... NCE

# மனிதம்

12 ஆடி.ஆவணி



...மையைப் பார்க்காதே!
...மையைப் பேசாதே!!
உண்மையைப் கேளார்தே!!!

உண்மையும்
உள்ளார்ந்தும்
இது,வே.
இன்று என் தாயகத்தில்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

• கிலாநேசன் •

*****************************

# அறுவடை

***************************

வானம்
கண்ணீர் சிந்தி
மூழ்கி கிடந்தது

அந்நியர்கள் அன்று
அறுவடை செய்து
கொண்டு போனபின்
எமக்கு மிஞ்சியதெல்லாம்
தரிசு நிலங்களும்
கடல் நீரும்தான்

இதில் என்ன விளையும்
என்ற ஏக்கம்

இரவு பகலாய்
உழைத்தாலும்
கையால் கட்டி
தலையில் சுமக்கும்
விவசாயம்தான் !

ஆனால் இப்போ
பாலைவனமாய்ப் போன
வயல்களில்
மனிதனை மனிதன்
அறுவடை செய்கிறான்

மனித எலும்புகள்
முதலாளித்துவ
சிந்தையில்
நல்ல விலையாம்

எமது நாட்டில்
எல்லாமே
விற்பனைப் பண்டம்தான்

எடுத்துக் கொள்ளட்டும்
அவர்கள் !
மீண்டும்
மனிதப் பண்ணைகள்
வைக்க
கடன் தருவார்கள் !

www.tamilarangam.net

# மனிதம்



- ஆனையிறவு முகாம் தாக்குதல் !
- ஜனநாயக சக்திகள் அழிப்பு !

கோட்டை முகாம் மீதான தாக்குதலுக்குப் பின் பாரிய தாக்குதலுக்குள் ஆனையிறவு முகாம் அகப்பட்டுள்ளது. சுமார் 800 இராணுவம் முகாமினுள் முடங்கிப்போயுள்ளது. நீண்ட நாட்களாகவே புலிகளின் 'பங்கர்'களும், பதுங்குகுழிகளும் முகாமை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தன. எதிர்பார்த்தது போலவே, தாக்குதல் தொடங்கி இன்று சுமார் 20 நாட்களுக்கு மேலாகின்றது.

வழமைபோலவே அரசு தமது இழப்புகளைக் குறைத்துக் காட்டியும் புலிகளது இழப்பை கூட்டிப் பெருக்கிக் காட்டுவதிலும், அறிக்கை விடுவதிலும் மும்முரமாகவே உள்ளது. PLOT போன்ற இயக்கங்களோ 'புலி எதிர்ப்பு' அடிப்படையில் அரசு சார்பு விபரங்களையே உண்மையானவை என்பதுபோல் செய்தி வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த உண்மை விபரங்களைத் தேடுவது முடியாத காரியம். கோட்டைத் தாக்குதலின்

www.tamilarangam.net



கிழப்பு விபரங்களோ இன்னும் இல்லை.

அரசு தனது கையாலாகாத்தனத்தில் வடக்கிலுள்ள அப்பாவி மக்கள்மீது விமானத்தாக்குதலைத் தொடுத்துள்ளது. பலாலி முகாமிலிருந்தும், கடல்வழியாகவும் 'செல்' தாக்குதலை மேற்கொண்டுள்ளது. இதில் வடமராட்சியில் 60 பேரும், மானிப்பாயில் 60 பேரும் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்து உள்ளதாகவும் செய்திகள் கூறின. கடைசி செய்தியொன்றின்படி யாழ். பல்கலைக் கழகத்துள் இராணுவம் குண்டு வீசியதில் 20 மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இலங்கை அரசு தமது இராணுவ தாக்குதலுக்கு பெயர் வைப்பதிலும், பெருந்தொகையான இராணுவத்தை ஏவி வெறியாட்டம் போடுவதும் பத்திரிகையாளர் மாநாடு நடத்துவதும், 'வாய்வீச்சு' பேட்டி கொடுப்பதுமாக பொழுதுபோக்கு ஆட்சி நடத்துகிறது. ஆனால் இந்தப் பயங்கரத்தை முகம் கொடுப்பதோ தமிழ் மக்கள்தான்! இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான எந்தவித திட்டத்தையும் முன்வைக்காமல், அந்த நோக்கம்கூட இல்லாமல் சொறிந்துகொண்டிருக்கும் அரசு 'புலிகள்தான் தடையாக இருக்கிறார்கள்' என்று வசதியாக கூறிக்கொண்டிருக்கிறது.

இந்த ஆனையிறவு முகாம் தாக்குதல் இராணுவ யுத்த தந்திர ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருக்கிறது. இவ் வகையான பாரிய தாக்குதல்களில் பின்வாங்குதலைச் செய்வதுகூட ஒரு யுத்த தந்திர வகையின் அடிப்படையில் அமையும்போது அது

www.tamilarangam.net



பலவீனம் என்று அர்த்தப்பட முடியாது. அத்தோடு புலிகள் பலவீனமானவர்கள் என அரசு கருதியிருந்தால் 7000 க்கு மேற்பட்ட இராணுவத்தையும் இராணுவத் தளபாடங்களையும் மேலதிகமாக களத்தில் இறக்கியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. இங்கு பிரச்சினை வெற்றி தோல்வி பற்றியதல்ல. இந்த தாக்குதலில் வெற்றி பெற்றால் சில நன்மைகள் ஏற்படலாம் என்பதை மட்டும் வைத்து மதிப்பிடுவது முழுமையானதல்ல. இதனால் ஏதாவது அரசியல் வெற்றியை அடையமுடியுமா என்பதே முக்கியமானது.

அரச இராணுவத்தின் அடக்குமுறையை அனுபவித்த (அனுபவிக்கும்) மக்களுக்கு எதிரியுடன் (அரசு இயந்திரத்துடன்) மோதுவதில் புலிகள் அடையும் ஒவ்வொரு வெற்றியும் மகிழ்ச்சியைத் தரலாம். ஆனால் இந்த வெற்றிகளை காப்பாற்றுவது எப்படி? மக்களின் பலத்தில் சாராத நிலையில் இது எப்படிச் சாத்தியம் ?. இதற்கு (இந்தியா போன்ற) அன்னிய சக்திகளின் உதவியை நாடவேண்டி ஏற்படலாம். இந்த அச்சம் நீங்குவதற்கான எந்த மாறுதலும் புலிகளின் போக்கில் ஏற்படவில்லை. அவர்கள் இப்போதும் மக்களை நம்பவில்லை. தமது போராட்ட முறையை மக்கள் போராட்ட முறையாக மாற்றும் அறிகுறிகூட இல்லை. குறைந்த பட்சம் அடிப்படை ஜனநாயக உரிமைகள் எதையுமே வழங்குவதாகவும் இல்லை. பொது எதிரிக்கு எதிராக போராடக்கூடிய மற்ற சக்திகளின் ஒரு சிறு அசைவைக்கூட அனுமதிப்பதாகவும் இல்லை.

www.tamilarangam.net



அண்மையில்கூட பல்கலைக் கழக மாணவர் சிலர் மீது சமூகவிரோத குற்றச்சாட்டுகளைச் சுமத்தி அவர்களை பிடித்துச் சென்ற இழிசெயலைப் புலிகள் செய்தது மட்டுமல்ல, 1985 இன் முற்பகுதியில் PLOT இலிருந்து வெளியேறி "தீப்பொறி"யை ஸ்தாபித்தவர்களில் ஒருவரான கேசவன் என்பவரை PLOT இயக்கத்தைச் சேர்ந்தவரென பொய்யைக் கூறி கைதுசெய்தும் (?) உள்ளனர். இதுவரை பாதுகாப்புப் பேரவை, NLFT, PLFT, தீப்பொறி போன்ற சிறிய ஜனநாயக அமைப்புகளைச் சேர்ந்த பலரை புலிகள் சிறைவைத்துள்ளதாகவும் (?) தெரிய வருகிறது. அதுமட்டுமல்ல இவர்களில் பலரை யாழ். கோட்டையின் உடைப்பதில் புலிகள் ஈடுபடுத்தியதாகவும் சொல்லப் படுகிறது. இந்திய இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டவர்களைக் கூட அவர்களின் பெற்றோர், உறவினர் பார்த்துப் பேச முடிந்தது. இந்த மனிதாபிமானம் கூட இந்த 'தலைமறைவுச் சிறைச்சாலையில்' கிடைப்பதில்லை.

சமூகமோ ஒரு நோயாளி ஆக்கப்பட்டு படுக்கைக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே புத்திஜீவிகளைக் காணவில்லை. பாடசாலைகளைக் காணவில்லை. படிப்பறிவே கொடுக்கப்படாமல் முட மாக்கப் பட்டிருக்கும் இளம் பருவங்கள் நாளைய காட்டுமிராண்டி வாழ்வை நோக்கி நகர்கின்றன. சரி, பிழையை பகுத்தறியக் கூடியளவுகூட சிந்திக்க விடாமல் மாற்றுக் கருத்துக்களைப் பெறவிடாமல் அறிவு தடைப்பட்டுப் போயிருக்கிறது. எதிர்காலத்தில் நம்பிக்கையற்ற பெருந்தொகை இளைஞர்கள் நாட்டை

www.tamilarangam.net



விட்டு அகதிகளாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இன்று வெடிப்புகளுக்கும், ஷெல் சத்தங்களுக்கும் மன அமைதியை மக்கள் பறிகொடுத்திருக்கிறார்கள்; குழந்தைகள் உளவியல் தாக்கத்தில் புதையுண்டு போயுள்ளனர். இந்தத் தாக்கத்திலிருந்து மீள்வதற்கு அவர்களிடம் எதிர்காலம் பற்றிய எந்த நம்பிக்கையும் கிடையாது. எந்தவித சுய பொருளாதாரத் திட்டமுமில்லாத 'போராட்டத்தில்' எதிரியிடம் தமது தேவைக்கு மக்கள் கையேந்தும் நிலையில் வைக்கப் பட்டிருக்கிறார்கள். அகதி முகாம்களிலும், வறுமை குடில்களிலும் பட்டினி தாக்கத்தொடங்கியுள்ளது. போரினால் பாதிப்புறும் மக்களின் உடனடி தேவைகளை கவனிக்கக்கூட சுயாதீனமான வெகுஜன அமைப்புகள்கூட தோன்றமுடியாமல் நசுக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் என்ன! பேசும் உரிமை, எழுதும் உரிமை, விமர்சிக்கும் உரிமை என அடிப்படை ஜனநாயக உரிமைகள்கூட மறுக்கப்பட்டு மக்கள் வாழவிடப் பட்டிருக்கிறார்கள்.

இப் பலவீனங்களின் நடுவே இராணுவத் தாக்குதல்களும் வெற்றிகளும் எதிர்காலத்துக்காகத் தரப்போவது எதனை ?

---

வாசகர்களே!

உங்கள் ஆக்கங்களையும்
விமர்சனங்களையும்
எதிர்பார்க்கிறோம்

MANITHAM
POSTFACH . 12
3000 BERN . 11
SWITZERLAND

---

www.tamilarangam.net



# தமிழக தேர்தலும் 'தலைவியின்' ஆட்சியும்



கடந்த மே மாதம் 20ம் திகதி ஆரம்பமான இந்திய நாடாளுமன்றத்திற்கான பத்தாவது பொதுத்தேர்தலும் தமிழக சட்ட மன்றத்திற்கான தேர்தலும் 21.5.91 தமிழ்நாட்டில் இடம்பெற்ற ராஜீவ்காந்தியின் படுகொலையை அடுத்து 3 வாரங்கள் பின்போடப்பட்டு யூன் 15ம் திகதி மீண்டும் இடம்பெற்றது. பாராளுமன்றத்துக்கான தேர்தலானது ஏற்கெனவே பத்திரிகைகளாலும், அரசியல் அவதானிகளாலும் கருத்து தெரிவிக்கப்பட்டவாறே எந்த ஒரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மையை பெற்று ஆட்சியமைக்க வாய்ப்புக் கிட்டவில்லை. கடந்த 89 தேர்தலில் பெற்றதை விட சிறிதளவு தொகுதிகளையே மேலதிகமாக கைப்பற்றிய இந்திரா காங்கிரஸ் கட்சி ராஜீவின் திடீர் மறைவினால் ஏற்பட்ட தலைமை வெற்றிடத்தை நிரப்புவதற்கான கோஷ்டி மோதல்கள் இடைநிறுத்தி பி.வி. நரசிம்மராவை தலைவராக்கி கொண்டு ஜெயலலிதாவின் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், வி.பி. சிங்கின் ஜனதா தளம் போலிக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் ஆதரவுடன் ஆட்சியமைத்துள்ளது. தமிழக சட்டமன்றத் தேர்தலில் எவருமே எதிர்பாராத வகையில் தமிழக தேர்தல் வரலாற்றில் என்றுமில்லாதவாறான பெரும்பான்மையைப் பெற்று ஜெயலலிதா தலைமையிலான அ.அ.தி.மு.க வெற்றி பெற்றுள்ளது. கருணாநிதியினது தி.மு.க கட்சியில் கருணாநிதி மட்டுமே தனது தொகுதியில் வெறும் 900 வாக்கு வித்தியாசத்தில்

www.tamilarangam.net



வெற்றி பெற்றுள்ளார். கடந்த காலங்களில் கருணாநிதியின் அரசில் மந்திரிகளாக இருந்தவர்கள் பலரும் ஜெயலலிதாவை விட தமிழக அரசியலில் நீண்ட காலம் அறிமுகமாகியிருந்த தி.மு.க அங்கத்தவர் பலரும் அ.தி.மு.கவின் புதிய முகங்களிடம் படுதோல்வி கண்டுள்ளனர். அ.அ.தி.மு.க வெற்றிக்கும் இன்றைய தமிழக அரசியலின் முன்நிற்பவர்களில் தி.மு.கவினை ஒப்பீட்டளவில் சமமான ஆட்சியை வழங்கக்கூடிய தன்மை கொண்டிருந்தபோதும் படுதோல்வியடைவதற்கான காரணங்களையும் நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எம்.ஜி. ஆரின் சினிமாத்துணைவியாக இருந்த ஜெயலலிதா அவராலேயே அரசியலுக்கு கொண்டு வரப்பட்டு அ.அ.தி.மு.கவின் கொள்கைபரப்பு செயலாளராக டெல்லி வரை அறிமுகம் செய்யப்பட்டவர். எம்.ஜி. ஆரின் மரணத்தின்பின் அவரது கட்சியின் மீதும், சொத்துக்களின்மீதும் உரிமைகோரி மனைவி ஜானகியுடன் சட்டசபை வரை சென்று யுத்தம் புரிந்தவர். கட்சியில் இருந்தவர்களை ஒருவரையொருவர் மோதவிட்டு தனக்கு சாதகமானவர்களுடன் அ.அ.தி.மு.க ஜெயலலிதா அணியெனப் பெயரிட்டுக்கொண்டு இடம் பெற்ற சட்டமன்றத்தில் எதிர்கட்சியாக இருந்தவர். அவ்இடைக்காலத்தில் ஜானகியுடன் பேரம் பேசி கட்சியின் இரட்டை இலைச்சின்னமுட்பட அனைத்தையும் தனதாக்கிக்கொண்டவுடன் தன்னுடன் இணைந்திருந்த அனைவரையும் அடிமை போல் நடத்தியவர். இவ்வளவும் தான் ஜெயலலிதாவின் அரசியல் பின்னணி. எம்.ஜி ஆரின் வாரிசு என்று கூறிக்கொள்வதைவிட எந்தவொரு

www.tamilarangam.net



கொள்கையோ திட்டமோ இவரிடம் கிடையாது.

ஒப்பீட்டளவில் ஏனைய கட்சி களைவிட ஓரளவு தரமான ஆட்சியை தி.மு.க நடத்தியிருந்தும் கூட அதனால் தேர்தலில் வெற்றிபெற முடியாமைக்கான காரணங்கள் பலவுள்ளன. அதில் ஒன்று ஜெயலலிதா வாழைப் பாடி கூட்டுக்கள் கருணாநிதி புலிகளைக் கொண்டு ராஜீவை கொலை செய்தமையால் மக்கள் அவரை நிராகரித்துவிட்டனர் என்று. ராஜீவ்காந்தி கொலை செய்யப்படாமலிருந்தாலும் ஜெய லலிதா தமிழக முதல்வராக வருவதற்கான சூழ்நிலைகள் தமிழகத்தில் தோற்றுவிக்கப்பட்டிருந்தமையை அவதானிக்க வேண்டும். தி.மு.க கடந்த தேர்தலில் வெற்றிபெற்று கூட்டப்பட்ட சட்டசபைக் கூட்டத்தில் ஜெயலலிதாவை அவமானப் படுத்தியமையும் அதன் அடிப்படையாக வைத்தே ஜெயலலி தாது பிரச்சார கூட்டங்கள் நடத்திவந்தமை வாழைப் பாடி ஆகியோருடன் சேர்ந்து தி.மு.க விற்கும் புலிகளுக்கும் இருந்த தொடர்பையும் புலிகள் தமிழகத்தில் நடத்திய கொலைகளையும் ஆதாரமாக வைத்து தமிழ்நாடே புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாக பெரிதுபடுத்தி தமிழகமக் களை அச்சத்துக்குள்ளாக்கியதுடன் எம்.ஜி.ஆர் காலத்தில் இருந்தே காங்கிரசுக்கும் அ.தி.மு.க விற்கும் இருந்த உறவை பயன்படுத்தி ராஜீவைக் கொண்டு கருணாநிதி அரசை கலைத்த தின்மூலமாக தன்னையொரு பெரியசக்தியாக காட்டிக் கொண்டமை எம்.ஜி.ஆர் தேர்தலில் வெற்றிபெற என்னென்ன உத்திகள் கையாண்டாரோ அவற்றை யெல்லாம் கையாண்டு (உ-ம் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா

www.tamilarangam.net



நடித்த படங்கள் திரையிடுதல் இன்னொரு எம்.ஜி.ஆர்
வாரிசாக காட்டிக் கொண்டமை போன்றவற்றின் மூலமாக
ஜெயலலிதாவின் வெற்றி உறுதியாகிவிட்ட நிலையில்
இவர்களால் தி.மு.க விற்கு எதிராக வைத்த குற்றச்சாட்டுக்
கள் நிரூபிப்பது போல் தேர்தலில் ராஜீவின் கொலையும்
இடம் பெற்றமையும் இத்தகைய பெரும்பான்மை பெற்று
வெற்றி பெற உதவியுள்ளது.

தேர்தலிலும் இத்தகைய
காரணங்களில் ஜெயலலிதா தம்பதுக்கு தளர்ந்தவரல்லாத
போதும் அவர் கடந்த காலங்களில் பேசி இட்டுப் பொறுக்
-கிவந்த திராவிட கொள்கை விடயங்கள் தன்னை எப்
போதுமே உலகத்தமிழர்களுக் கெல்லாம் தலைவராக காட்டிக்
கொள்ள வேண்டும் என்பன போன்ற பிற்போக்குவாத கருத்துக்
களையும் தனது கொள்கையாக பேசி வந்ததால் அவற்றை
யெல்லாம் மொத்தமாக விட்டுவிட்டு ஓடமுடியாத பரிதாப
நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டார். கடந்த தேர்தலில்
ஜனதா தளம் கூட்டணியுடன் கூட்டு சேர்ந்து விட்டு
பின்னர் தனது சொந்த நலனுக்காக முரண்பட்ட கருத்துக்
கள் கூறி மக்கள் குழப்பத்தில் ஆக்கியமை இலங்கையில்
புலிகள் தவிர்ந்த இயக்கங்களும் செயலிழக்கப்பட்டதன்
பின்னர் புலிகளுக்கு தமிழ்நாட்டில் நேசக்கரம் நீட்டியதுடன்
மறுபுறத்தில் அரசு கலைக்கப்படும் சூழ்நிலை தோன்றிய பொழுது
அனைவரையும் கைது செய்யுமாறு அனுமதி வழங்கிவிட்டு
ஆட்சி கலைக்கப்பட்டவுடன் மீண்டும் மார்பை நிமிர்த்தி
அவர்களுக்கு உதவுவதில் என்ன தவறு என்பது என்ற

www.tamilarangam.net



பாணியில் பேசுவது போன்ற தனது சந்தர்ப்பவாத குணங்களை அப்பட்டமாக வெளிப்படுத்தியமை. ஜெயலலிதா தனக்கு அச்சுறுத்தலாக அமையாதவரை எம்.ஜி.ஆரைவிட்டு நெழிவு சுழிவாக நடந்துவிட்டு ஜெயலலிதாவின் வளர்ச்சியை அவதானித்ததும் தன்னைவிட எம்.ஜி.ஆருக்கு விசுவாசி இந்தியாவில் இருக்கமுடியாது என காட்டிக்கொள்ள முனைந்தமை போன்ற நடவடிக்கைகளால் இவரது சாயம் வெளுத்துவிட்டமை போன்றவையும் இவரது தோல்விக்கு காரணமாய் இருந்துள்ளது.

இவற்றைவிட இந்திய குறிப்பாக தமிழ்நாட்டு மக்களது அடிப்படை பிரச்சினைகள் சம்பந்தமாக அளித்திட்ட வாக்குறுதிகள் எதுவுமே மக்களுக்கு எட்டாதவரை தொடர்ந்தும் இவரையே தெரிவு செய்வதைவிட புதிய ஒருவரை தெரிவு செய்வதன் மூலம் ஏதாவது பெறலாம் என மக்கள் எதிர்பார்க்கக்கூடிய வாய்ப்புகள் இன்று இந்திய அரசியலில் இழையோட ஆரம்பித்துள்ளது. அதனது வெளிப்பாடாகவும் இது இருக்கலாம்.

சீரழிவு சாக்கடை அரசியலை திறம்பட ஆற்றுகிறார்களோ அவர்களே ஆட்சிக் கட்டிலை கைப்பற்றும் தகுதி உடையவர்களாகுமளவுக்கு மக்கள் திசைதிருப்பபட்டுள்ளனர். சினிமா பத்திரிகைகள் அனைத்துமே போதிப்பது சீரழிவு மட்டுமாகவே இருக்கும்போது இதற்குள் ஒருசில சீர்திருத்த கருத்துக்களை கொண்டவர்கள் கூட முன்வர முடியாது போவது மட்டுமன்றி இவற்றை எவர் திறம்பட ஆற்றுகிறாரோ அவரே வெற்றி பெறுகின்றார்.

• வரதன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சுவிஸ்

## கன்ரோன் அமைப்பு முறையும், தேசிய இனங்களும்.




1991ம் ஆண்டு சுவிஸ் பிறந்து தனது 700வது ஆண்டு விழாவைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறது. பல மொழி பேசும் வெவ்வேறு தேசிய இனங்கள் வாழும் ஒரு நாட்டில் வேறெந்த நாடுகளிலும் இல்லாதவொரு புதிய அரசியல் அமைப்பில் அதாவது "கன்ரோன்" அமைப்பில் எப்படி மக்கள் இணைந்து வாழ்கின்றார் என்பதைப் பற்றிப்பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

வரலாறு :

சுவிஸ் என்பது முன்னர் எப்போதும் ஒரு நாடாக இருந்ததில்லை. பல சிறிய அரசுகளையுடைய நிலப்பரப்புக்களை கொண்ட சிற்றரசுகளாகவே இருந்தது. எல்லைநாடுகளாக ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி, அவுஸ்திரியா ஆகியவற்றை கொண்டது. இப்பெரிய நாடுகளின் படையெடுப்புக்களால் அடிக்கடி இச்சிற்றரசுகள் தாக்கப்பட்டன அல்லது அவர்களின் கீழ் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டன இதனால் முதன் முதலில் 1291ம் ஆண்டு ஊரி (uri), சிவைஸ் (schwyz) உன்ரர் வால்டன் (unterwalden) என்ற சிறிய அரசமைப்புக்கள் தமக்குள் பாதுகாப்பு, பரஸ்பர உதவி, ஆதரவு என்பனவற்றின் அடிப்படையில் ஓர் சுயாட்சியுள்ள பிரதேசங்களின் இணைப்பு (confederation) ஒன்றை உருவாக்கிக் கொண்டன பின்னர் இக்கூட்டமைப்பு சுயநிர்ணய உரிமை, சொந்த சட்ட அமைப்புமுறை போன்ற பாரம்பரிய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வது என்ற அடிப்படையில் வளர்ந்து வலுப்பெற்றது.




www.tamilarangam.net



1513ம் ஆண்டில் இக்கூட்டமைப்பில் 13சுயாட்சிப் பிரதேசங்கள் அங்கம் வகித்தன அப்போது இக்கூட்டமைப்புக்கு தலைநகரம் மையப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பு என்ற ஒழுங்கு இருக்கவில்லை ஆனால் தமக்கிடையேயுள்ள பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வதற்கென ஒவ்வொருவருடமும் ஒவ்வொரு சுயாட்சிப் பிரதேசங்களின் முக்கிய இடங்களில் பிரதிநிதிகள் சந்தித்துக் கொள்வர். அப்போது சுயாட்சிப் பிரதேசங்களில் இருந்த அரசமைப்பு Landsgemeinde என்று அழைக்கப்பட்டது.(திறந்த உள்ளூராட்சி சபை போன்றவடிவம்). இந்த அமைப்பு முறை (Appenzeller)அப்பென்செல்லர், (Glarus) கிளாரஸ் (unterwalden) உன்ரவால்டன் ஆகிய சிறிய கன்டோன்களில் காணப்படுகின்றது. இதற்கு பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் முறையே விநோதமானது. ஏப்பிரல் மாத இறுதி அல்லது மே மாத முதல் ஞாயிறு தினங்களில் இக்கன்டோன்களின் பொதுமக்கள் ஒரு திறந்த வெளியில் கூடி கைகளை உயர்த்தி ஆதரவுதெரிவிப்பதன்மூலம் தங்கள் உள்ளூராட்சி சபையை (Landsgemeinde) தெரிவு செய்வார்கள். 1798 இல் ஐக்கிய கெல்வெற்றியா (Confedration Helvetia) உருவாக்கப்பட்டது. அப்போது 19 கன்டோன்களைக் கொண்ட சமஸ்டிக்குடியரசாக சுவிஸ் விளங்கியது. 1848 இல் கன்டோன் பேர்ண் (BERN)ஐ தலைநகராக கொண்ட மையப்படுத்தப்பட்ட சமஸ்டி அரசு ஸ்தாபிக்கப்பட்டது புதிய அரசியல் அமைப்புமுறையும் நிர்வாகமையப்படுத்தலும் உருவாக்கப்பட்டன அரசியல் அமைப்பு வடிவங்களில் மாற்றங்கள் உருவாக்கப்பட்டு தேசத்தின் ஒற்றுமைக்கு முக்கியத்துவமளிக்கும் படி செய்யப்பட்டது. கன்டோன் பேர்ண்(BERN) பகுதியாக இருந்த (JURA) யூரா என்னும் பிரதேசம் தமக்குசுயாட்சி வேண்டும் என்று போராடி பிரிந்து சென்று தனிக்கன்டோனாக இருக்கின்றன.


1803
St. Gall


1803
Grisons



1803
Aargovia


1803
Thurgovia

www.tamilarangam.net



நான்கு தேசிய இனங்களை கொண்ட இந்நாட்டில் சமஷ்டி ஆட்சி முறையினால் அனைத்து மக்களின் பிரதிநிதித்துவத்தை பெறும் வகையில் ஆட்சி அமைப்பினை ஏற்படுத்தி உள்ளனர். இந்நாட்டில் 26 கன்டோன்கள் (சுயாட்சிப் பிரதேசங்கள்) உள்ளன. அவற்றில் மூன்று அரைக் கன்டோன்கள் ஆறும் அவையாவன பாசலில் (BASEL) பாசல் நகரும், புற நகர் பகுதியும் (BASEL LAND), unterwalden இல் obwalden, nidwalden என்றும் APP-ENSELLER இல் outer Rhodes, inner Rhodes என்று பிரிந்து உள்ளன. ஒவ்வொரு கன்டோன்களும் தமக்கென ஆட்சியமைப்பை கொண்டுள்ளன. இதே போன்று அக்கன்டோன்களில் இருக்கும் நகரங்களும், கிராமங்களும் சிறிய ஆட்சி அமைப்பினை கொண்டுள்ளன. இவை அனைத்தும் இணைந்தே சுவிஸ் சமஷ்டிப் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.



www.tamilarangam.net



கன்டோனின் நலன்களை பேணும் வகையில் 46 கன்டோன் பிரதிநிதிகள் (STÄNDERÄTE) 26 கன்டோன்களில் இருந்து தெரிவாகின்றனர். 6 அரைக் கன்டோன்களிலிருந்து 6 வாக்குகளையும் மேலும் 6 சிறிய கன்டோன்கள் 12 வாக்குகளையும் அளிக்கலாம். இதனால் பெரும்பான்மையை உறுதிப்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. இதனால் சிறிய கன்டோன்களின் சுயாதீனம் இழக்கும் வகையில் தீர்மானங்கள் நிறைவேற்றுவதை தடுக்கக்கூடியதாக உள்ளது.

200 தேசிய பிரதிநிதிகள், 32 ஆயிரம்குடிமக்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற வகையில் தெரிவாகின்றனர். 107 பிரதிநிதிகள் பின்வருமாறு தெரிவு செய்யப்படுகின்றனர்.

கன்டோன் Zürich இல் 35, BERN இல் 29, கன்டோன் VD வோ'இல் 17, கன்டோன் ஆர்கவ் (AG) 14, செங்காலனில் (SG) 12 பேர் என்ற அடிப்படையிலும் மிகுதி 21 கன்டோன்களில் 93 பிரதிநிதிகளும் தெரிவாகின்றனர். கீழ்வரும் அட்டவணை மக்கள் பிரதிநிதிகளின் தெரிவையும் பதவிகளின் பெயரையும் விளக்குகிறது.

| மட்டம் | இடம் | பிரதிநிதிகளின் பதவி | எண்ணிக்கை | பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் அமைப்புகளின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| உள்ளூராட்சி நகர மன்றம் | Zollikon | இல்லை [உள்ளூராட்சி மன்றக் கூட்டம் இல்லை] | — | உள்ளூராட்சி மன்ற பிரதிநிதி | 7 |
| நகரம் | Zürich | உள்ளூராட்சி மன்ற பிரதிநிதி | 125 | நகர பிரதிநிதி | 9 |
| | Wädenswil | " | 45 | " | 9 |
| கன்டோன் | Zürich | கன்டோன் பிரதிநிதி (kantonsrat) | 180 | அரச பிரதிநிதி (Regierungsrat) | 7 |
| | Uri | நிலப் பிரதிநிதி (Landsrat) | 61 | அரச பிரதிநிதி | 7 |
| | Freiburg பிரெஞ்சு மொழி பேசும் கன்டோன் | பெரிய பிரதிநிதி (Grosserat) | 130 | நகர பிரதிநிதி | 7 |
| | Tessin இத்தாலி மொழி கன்டோன் | பெரிய பிரதிநிதி (Gran Consiglio) | 90 | நகர பிரதிநிதி (Consiglio di Stato) | 5 |
| | Genf பிரெஞ்சுக் கன்டோன் | பெரிய பிரதிநிதி (Grand Consoil) | 100 | நகரப் பிரதிநிதி | 7 |
| சமஷ்டிப் பாராளுமன்றம் | — | தேசிய பிரதிநிதி NATIONlRAT | 200 | சமஷ்டிப் பாராளுமன்றப் பிரதிநிதி | 7 |
| " " | — | கன்டோன் பிரதிநிதி STÄNDERAT | 46 | Bundesrat | |

www.tamilarangam.net



தலைமைத்துவம்:


சாதாரணமாக எல்லா நாடுகளிலும் பிரதமர், ஜனாதிபதியின் பெயர்களை அறிந்து கொள்வது சுலபம் ஆனால் சுவிஸில் பிரதமர் யார்? ஜனாதிபதி யார்? என்பதை இலகுவில் காணமுடியாது ஏனெனில் இங்கு ஜனாதிபதியோ, பிரதமரோ கிடையாது அவ்வாறாயின் எவ்வகையில் இவ் ஆட்சி முறை நடைபெறுகின்றது என்றுகேள்வி எழுவது நியாயமானதே. இந்நாட்டில் கூட்டு ஆட்சிமுறையே நடைமுறையில் உள்ளது இவ்வகையான அதிகாரப்பரவலாக்கம் வேறு நாடுகளில் நடைமுறையில் இல்லை. நாம் முன்பு பார்த்தது போல் ஒவ்வொரு பிரதிநிதிகளின் பெயர்களும் தாம் பிரதிநிதிப்படுத்தும் அமைப்பின் பெயருடன் சேர்த்து Rat என முடிவடைகிறது. உதாரணமாக Bundesrat, Gemeinderat, Ständerat, Nationalrat,...... என்பவற்றைப் பார்க்கலாம். மேற் கூறிய அமைப்புகளில் ஒவ்வொரு தலைவர்களையும் அவ் அமைப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட பிரதிநிதிகளே தெரிவு செய்கின்றனர். உ+ம் Bundesrat(சமஸ்டிப் பாராளமன்ற பிரதிநிதிகள்) சமஸ்டி பாராளுமன்றதலைவரை (Bundespresident)ஐ தெரிவு செய்கின்றனர். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இவரே இந்நாட்டு பிரதமர். ஆனால் சாதாரணமாக பிரதமமந்திரிக்கு கூடுதல் அதிகாரங்கள் உள்ளது. ஆனால் இங்கோ சமஸ்டி பாராளுமன்ற பிரதிநிதிகளின் கூட்டத்தை கூட்டுவதற்கும், வெளிநாட்டு பிரயாணங்களை மேற்கொள்வதற்கும் மட்டுமே இவருக்கு உரிமையுண்டு சாதாரணமாக இவரும் சமஸ்டிப் பாராளமன்ற பிரதிநிதி போலவே கணிக்கப்படுவர். இவ்வாறே இராஜாங்க பிரதான, நிர்வாக துறைக்கான செயலாளரும் தெரிவு செய்யப்படுகின்றார். இவர் Bundeskanzler என்று அழைக்கப்படுகிறார். இப்பதவிக்கான தேர்வு சுழற்சி முறையில் ஒவ்வொரு வருடமும் 7 சமஸ்டி பாராளமன்ற பிரதிநிதிகள் தெரிவாகும் போது 4 தேசிய இனங்களின் பிரதிநிதித்துவம் கவனத்தில் கொள்ளப்பட்டே தெரிவு செய்யப்படும். கீழ்வரும் மாதிரிப்படத்தின் மூலம் சாதாரண பாராளமன்ற தெரிவுக்கும், சமஸ்டிப் பாராளமன்ற தெரிவுக்கும் இடையிலான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேறுபாட்டினை தெரிந்து கொள்ளலாம்.




சமஸ்டிப் பாராளுமன்ற பிரதிநிதிகளான 7பேர்கள் 1848 — 1959 வரை அங்கத்துவம் வகித்த கட்சிகளை கீழ்க்காணும் அட்டவணை மூலம் அறிந்துகொள்ளலாம்.

| | |
|---|---|
| 1848 | F F F F F F F |
| 1891 | F F F F F F C |
| 1919 | F F F F F C C |
| 1929 | F F F F C C V |
| 1943 | F F F C C V S |
| 1959 இல் இருந்து | F F C C V S S |

கட்சிகள்

(F) FDP ஜனநாயகக்கட்சி
(C) CVP கிறிஸ்தவ மக்கள் ,,
(S) SVP சுவிஸ் மக்கள் ,,

சமஸ்டிப் பாராளுமன்றம், உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களும் உரிமைகளும்:-

- அதிகாரப் பரவலாக்கல் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன

1) கன்டோன்களுக்கான உரிமை
2) சமஸ்டிப்பாராளுமன்றத்திற்கான உரிமை
3) சமஸ்டி பாராளுமன்றமும் கன்டோன்களும் இணைந்த உரிமை.
4) சமஸ்டிப் பாராளுமன்றத்தின் சட்டத்திற்கு அமைய கன்டோன்கள் நடைமுறைப்படுத்தும் உரிமை.

www.tamilarangam.net



| | கன்டோன் | சமஷ்டி பாராளுமன்றம் | சமஷ்டி பாராளுமன்றம் கன்டோன் | சமஷ்டி பாராளுமன்ற சட்டத்தில் கன்டோன் |
|---|---|---|---|---|
| பொலிஸ் (சமஷ்டி பொலிஸ் தவிர்ந்த) | ● | | | |
| புகையிரதப் போக்குவரத்து | | ● | | |
| இடஒதுக்கீடு | | | ● | |
| வீதிப்போக்குவரத்து | | | | ● |
| வான் கடல் போக்குவரத்து | | ● | | |
| வரி | | | ● | |
| வயோதிப காப்புறுதி | | | | ● |
| உள்ளூராட்சி அமைப்பு | ● | | | |
| அமைப்புச்சட்டம் | | ● | | |
| வளர்ச்சித் திட்டம் | | | ● | |
| தொழில் சட்டம் | | | | ● |
| ஏழைகள் காப்பு | ● | | | |
| சுங்க வரி திணைக்களம் | | ● | | |
| வியாபாரம் | | | ● | |
| குற்றவியல் | | | | ● |
| இருப்பு | ● | | | |
| நாணயம் | | ● | | |
| விவசாயம் | | | ● | |
| சூழல் பாதுகாப்பு | | | | ● |

இவ் அட்டவணையில் இருந்து மேற்கூறிய 4 வகைக்குள்ளும் உட்பட்ட உரிமைகளை காணலாம்.

இதேபோன்று உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அதிகாரங்கள் உள்ளன. உள்ளூராட்சி மன்றங்களில் பின்வரும் பிரிவுகள் உள்ளன

1) அரசியல் பிரிவு

2) தேவாலயப் பிரிவு

3) மக்கள் பிரிவு

4) நகரசுத்திகரிப்பு பிரிவு

5) பாடசாலை பிரிவு என்றும்; வீதிகள், வாய்க்கால் அமைப்பு முறைகள், தண்ணீர், இடஒதுக்கீட்டு வசதி, வயோதிப, இளைஞர் விடுதிகள், நீச்சல் தடாகவசதிகள், கார் தரிப்பு நிலையவசதி, மயானம், பாடசாலைகள் போன்றவற்றையும் உள்ளூராட்சி மன்றங்களே ஏற்படுத்திக் கொடுக்கின்றன. சில வேளைகளில் சமஷ்டிப் பாராளுமன்றத்துடனும், கன்டோனுடனும் இணைந்து செய்யக்கூடிய வேலைத்திட்டங்களும் உள்ளன. உதாரணமாக தேசியபாதை

www.tamilarangam.net



அமைப்பு, விரைவு (Auto Bhan) பாதையமைப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

சர்வஜன வாக்கெடுப்பும் அது நடைபெறும் முறையும்:-

சர்வஜன வாக்கெடுப்பை நடாத்து முன் அக்கருத்தோடு உடன்பாடுடைய கட்சிகளை இணைத்து சர்வஜன வாக்கெடுப்பிற்கான குழுவை அமைத்து அக்குழு உடன்பாடு கொண்ட மக்களிடம் கையெழுத்து சேகரிப்பினை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு சேகரித்தபின் எவ் மட்டத்தில் அச்சட்டம் நிறைவேற்ற வேண்டுமோ அம்மட்டத்திற்கு கொண்டு செல்லப்படும். கன்டோன்களில் சட்டங்களை இயற்றுவதற்கான சர்வசன வாக்கெடுப்பிற்கான கையெழுத்தின் எண்ணிக்கைக்கும் வித்தியாசம் உள்ளது. சமஷ்டிப் பாராளுமன்றத்தில் ஒரு லட்சம் கையெழுத்துக்களை 18 மாத காலத்துக்குள் சேகரித்து கொடுக்க வேண்டும். கன்டோன் Zür ich இல் சட்டம் இயற்றுவதற்கான சர்வசன வாக்கெடுப்பினை நடாத்துவதற்கு 10 ஆயிரம் வாக்காளர்களின் கையொப்பம் or 60 கன்டோன் பிரதிநிதிகளின் கையொப்பம் போதுமானது எனக் கருதப்படுகிறது. இவ்வகையில் இக்கோரிக்கை அங்கீகரிக்கப்பட்ட பின்னால் மக்களிடம் சர்வசன வாக்கெடுப்பு நடைபெறும்.

• ப.நரேந்திரன்

முதலாளித்துவ நாடுகள் மற்றும் மூன்றாம் உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் தேசிய இனப் பிரச்சினை சுவிஸில் சிறப்பாக தீர்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் எவ்வாறு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் வாசகர்கள் அறியும் நோக்கிலேயே இக் கட்டுரை இங்கு வெளியிடப்படுகிறது. இதன் அர்த்தம் இதைவிடச் சிறந்த முறையில் தேசிய இனப்பிரச்சினைகளை தீர்க்க முடியாதென்றோ அல்லது சுவிஸின் ஜனநாயகம் "செழித்தோங்குகிறது" என்றோ அர்த்தமாகிவிடாது என்பதையும் வாசகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்

www.tamilarangam.net





# "உள்ளக்குமுறல்"

காலம்காலமாய் பெண்கள் பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், குலாச்சாரங்கள், பரம்பரைக்கௌரவம், (போலிக்கௌரவம்) என்று கட்டுப்படுத்தப்பட்டுக் கொ-ண்டே வருகிறார்கள். இவர்கள் இன்று எமது நாட்-டு போராட்டத்தின்பாதிப்பிலும், குடும்ப வாழ்க்கைக்காகவும், சந்தர்ப்பம்சூழ்நிலையாலும், சொந்தநாட்டை விட்டு. பெற்றதாய், தந்தை, சகோதரர்கள், உறவினர்களை பிரிந்து, கணவனே சொந்தம் என்று வெளிநாடுகளில் வாழவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகியுள்ளனர்.

இவர்களில் ஒருசிலர் கணவனால் பல புதியபழைய பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்கவேண்டியவர்களாக உள்ளனர். இவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளில் எனக்கு தெரிந்த ஒருசிலவற்றை விவாதிப்பதற்கு உட்படுத்தியே இக்கட்டுரையை தொடர்கிறேன்.

மற்றைய பெண்களும் முன்வந்து தமது பிரச்சனைகளை வெளிப்படுத்தவும், தீர்வுகளைக்கூறவும் கருத்துப்பரிமாற்றம் செய்வதற்கும் ஒரு கருவியாக மனிதத்தை ஏன் பாவிக்கக்கூடாது?

மனதிலுள்ள பிரச்சனைகளை சொல்வதற்-கு உறவினர்களும் இல்லாமல், நண்பர்களிடமும் சொல்லாமல், வேதனையோடு வாழ்ந்துகொண்டிருப்பதை

www.tamilarangam.net



விட புனைபெயர்களில் [சொந்தப் பெயர் பிரச்சனைக்குரியதானா ல்] நாங்கள் அனுபவித்த, அனுபவிக்கின்ற, வேதனைகளையும், பிரச்சனைகளைவென்ற முறைகளையும், மறக்க முடியாத சம்பவங்களையும், மற்றபெண்களுக்கு வெளிப்படுத்துவதன் மூலம் இவற்றில் இருந்து ஓரளவேனும் விடுபடவும், சந்தோஷமான வாழ்க்கையை தொடரவும் உதவும் என நம்புகிறேன்.

ஒரு சில ஆண்கள் பெண்களை அடக்கி வைத்திருப்பது வாழ்க்கையின் அடிப்படையென்று நினைக்கிறார்கள். மேலும் எல்லா ஆண்களுமே பெண்களை அடக்குகிறார்கள், பிரச்சனைக்குள்ளாக்குகிறார்கள் என்று சொல்லமுடியாதாயினும் பெரும்பாலானவர்கள் அடக்குமுறையை பாவிக்கின்றார்கள் (கலாச்சாரம் என்று நினைத்தோ, எப்படியோ) என்பது மட்டும் உண்மையே. இதனை இவர்கள் அப்பாவித்தனமாகவோ, விசமத்தனமாகவோ, அறிவீனமாகவோ செய்கிறார்கள் என்று கருதவும் முடியாதிருக்கின்றது. காலம் காலமாய் கடைப்பிடிக்கப்பட்டுவருவதாலோ அல்லது பெரியவர்களிடம் இருந்து கற்றுக்கொண்டதாலோ இவர்கள் இப்படி நடக்கிறார்களென எண்ணுகிறேன். இவ்வடக்குமுறை உறவினர்களோடு இலங்கையில் வாழுகின்ற பெண்களுக்கு அதிகபாதிப்பை ஏற்படுத்தப்படாவிடினும் இங்கு கணவனே எல்லாமென்று வாழுபவர்களுக்கு பெரியளவிலான பாதிப்பை ஏற்படுத்துகிறது.

மனைவி, கணவனிடையே ஒழிவுமறைவின்றி எல்லாவிடயத்திற்கும் இரண்டு பேருமே

www.tamilarangam.net



கலந்து ஆலோசித்து, வேலைகளிலும்; "இது மனைவி செய்ய வேண்டியது" என்று ஒதுக்காமல் இருவருமே இன்ப, துன்பங்களை பகிர்ந்து கொள்வதினால் பிரச்சனைகள் இல்லாமல் சந்தோசமான வாழ்க்கை வாழ முடியும். ஆனால் சிலர் மனைவியென்றால் கட்டாயம் அவள்தான் சமைக்க வேண்டும், துப்பரவு செய்யவேண்டும், உடைகளை தோய்த்து மடித்துவைக்கவேண்டும், பிள்ளைகளை பார்க்கவேண்டும், நினைக்கும் தேனீர், சாப்பாடு போட்டுத்தர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். வெளிநாட்டில் இரண்டுபேருமே வேலைக்குப் போனால்தான் காசுக்கஷ்டம் இல்லாமல் வாழமுடியும். அப்படியிருக்க அவள் வேலைக்கும்போய், இவ்வளவு வேலைகளையும் செய்தால் எவ்வளவு களைப்புக்குள்ளாவாள், எவ்வளவு கஷ்டப்படுவாள் என்பதை உணர்வதில்லை. T.V பார்த்துக்கொண்டு மதுபானம் அருந்துவதைவிட்டு கணவனும் ஒத்துழைப்புக் கொடுத்தால் அவளுக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கும். கணவனிலும் எவ்வளவு அன்பாக இருப்பாள்.

கணவன் மனைவியிடையே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வேண்டும். ஆனால் கணவன்மாரோ மனைவி மட்டும்தான் விட்டுக்கொடுத்துப் போக வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆண்கள் தங்களுக்கு மட்டும்தான் ஆத்திரம், கோபம், ஆவேசம், வெறுப்பு வரும் என்று நினைக்கிறார்கள். பெண்களுக்கும் வரும்தானே என்று நினைப்பதில்லை. எல்லோருமே தாய்வயிற்றில்தான் பிறக்கிறார்கள், ஒரேசூழலில்தான் வளர்கிறார்கள் அப்படியிருக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவனுக்கும் ஆத்திரம், கோபம், வரும் என்று ஏன் அவர்கள் நினைப்பதில்லை. கணவன் விடுகிற பிழைக்கு, தவறுகளுக்கு மனைவி ஆத்திரப்படத்தான் வேண்டும். ஏனென்றால் அதனால் ஏற்படுகின்ற விளைவுகள் கணவனைமட்டும் பாதிப்பதில்லை, அவர்களது குடும்பத்தை, வாழ்க்கையைப் பாதிக்கின்றது. இப்படியிருக்க மனைவியர் கணவன் பொறுவழி பிழையென்று சொல்வதற்கு ஏன் அனுமதிப்பதில்லை. ஏதாவது அவர்கள் எதிர்த்துக் கதைத்தால் " நான் உனக்கு அதிகமாக இடம் தந்திற்றன் " என்றும் " உனக்கு வேலைக்குப்போய் உழைக்கிறதிமிர் " என்றும் ஆத்திரப்படுகிறார்களே ஒழிய ஏன் சொல்கிறார்கள் எதற்கு சொல்கிறார்கள் என்று சிந்திப்பதேயில்லை.

கணவன் மனைவிக்கிடையே புரிந்துகொள்ளல் வேண்டும். சில கணவன்மார் பிறந்த வீடு அன்பு, பாசம் கடமை தங்களுக்குமட்டும்தான் சொந்தம் என்றும், திருமணம் செய்தபின் பெண்கள் தங்கள் குடும்பங்களை மறந்துவிட வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் மட்டும் கிரமமாக கடிதம் போடுவதும், காசு அனுப்புவதும். மனைவியர் இப்படிச் செய்தால் அதனை ஏற்றுக்கொள்ளாமல் சண்டைபிடிப்பதும் சரியாஎன்று யோசிக்க வேண்டும். மேலும் அவள் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்க விரும்புகிறாளா? அல்லது வெளியில் கணவனோடு உலாவ விரும்புகிறாளா? நண்பர்கள் வீடுகளுக்கு போக விரும்புகிறாளா? நல்ல உடை, நகைகளை அணிய விரும்புகிறாளா?, என்று புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து நடந்தால் கணவன் மனைவியிருவருமே சந்தோஷமான வாழ்க்கை வாழமுடியும்.

- மதிவதனி -

www.tamilarangam.net



# யூகோஸ்லாவியா

## உடையும் குடியரசுகள்



வானிலிருந்து குண்டுவீச்சு.... தரையினிலும் மும்முரமான பீரங்கித்தாக்குதல்கள் --- சமாதானத்தை தோற்றுவிக்கும் யூகோஸ்லாவிய இராணுவம் என்று கூறிக் கொண்டு அப்பாவி மக்கள் மீது பாய்ந்து தெறும் நடவடிக்கைகள். இதுவரையில் நூற்றுக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டு விட்டனர். காயப்பட்டவர்களின் கணக்கோ தெரியவில்லை. ஆயிரக்கணக்கில் அகதிகளாய் யூகோசிலாவிய மக்கள்!

இது எங்கோ இரண்டு நாடுகளுக்கிடையில் நிகழும் யுத்தம் அல்ல ஒரே கூட்டமைப்பில் இருந்து வந்த யூகோசிலாவியாவின் குடியரசுகளுக்கிடையில் நிகழும் யுத்தம் தேசிய இனங்களுக்கிடையில் நிகழும் யுத்தம். சிறுபான்மை குரோசிய மக்களுக்கும் பெரும்பான்மையான சேர்பிய மக்களுக்கும் இடையே இன்று நிகழும் யுத்தம்.

குரோசிய முழு மக்களுக்கும் எதிராக யூகோசிலாவிய இராணுவத்தின் மிகப்பெரிய யுத்தமிது என்று தெற்கு குரோசியாவின் OSIJEK நகர அதிகாரி குறிப்பிட்டார்.

www.tamilarangam.net



இங்குதான் சண்டை மும்முரமாய் நிகழ்கிறது. இந்த யுத்தத்தை குரோசியர்கள் தமது சுதந்திர குரோசியாவுக்கான யுத்தமாகவே கருதுகின்றனர். குரோசிய குடியரசுத்தலைவரோ; "நாம் எம்வாழ்வின் மேம்பாட்டிற்காகவே போராடுகிறோம் இரத்த சிதறல்கள் இல்லாமல் குரோசியர்களுக்கு ஒரு அரசியல் தீர்வு கிடைக்குமானால் அது பூஜ்ஜியமாகவே இருக்கும்" என்றார். தாக்குபவர்கள் யார் பாதுகாப்பவர்கள் யார் என்று தெரியாமலேயே யூகோசிலாவிய மக்கள் அவலப்படுவதாக பத்திரிகைகள் எழுதுகின்றன.

யூகோஸ்லாவியாவில் தேசிய இனங்களுக்கிடையில் போராட்டங்கள் வெடித்தது இதுதான் முதல் தடவை அல்ல. பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட இந் நாட்டில் தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளும் போராட்டங்களும் பல ஆண்டுகள் தொடர்ந்து வந்தது. இருந்தும் இந்தவருடத்தில்தான் பெரும் எரிமலையாய் வெடித்துள்ளது.

2 கோடியே 35 இலட்சம் சனத்தொகையை கொண்ட யூகோசிலாவியாவில் பலவேறுபட்ட மொழி,மத,இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றார்கள். செர்பியர்கள் 36% குரோசியர்கள் 20%, ஸ்லோவினியன் 8%, மாசிடோனியன் 6% இன்னும்பல இனக்குழுக்களும் மதச்சிறுபான்மையாக முஸ்லிம்களும் உள்ளனர். இந்த 4 தேசிய இனங்களும் தெற்கு ஸ்லாவிய மக்கள் என அழைக்கப்படுகின்றனர்.

தெற்கு ஸ்லாவியர்களின் நாடு என்று அர்த்தப்பட லே யூகோஸ்லாவியா என்ற பெயர் 1921 இல் அலெக்ஸாண்டர் என்ற செர்பிய மன்னரால்தான் சூட்டப்பட்டது. ரோமானிய பேரரசின் ஆட்சிக்காலத்தில் ஒருபகுதியாக இருந்துவந்த யூகோஸ்லா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வியா பின்பு பல தனி இராச்சியங்களாக மன்னர்களால் ஆளப்பட்டும் அதன் பின்பு துருக்கியர்களின் படையெடுப்பில் மூழ்கி 19 ம் நூற்றாண்டு சேர்பிய இனத்தாரின் போராட்டத்தோடு விடுதலை பெற்றது. பின்னர் 2ம் உலகப்போரில் நாஜிப்படைகளால் கைப்பற்றப்பட்டது.

டிட்டோ தலைமையிலான தேசிய விடுதலை இராணுவம் ரஷ்ய படைகளின் உதவியுடன் நாஜிகளை தோற்கடித்து 1945ல் யூகோஸ்லாவிய மக்கள் குடியரசுகளின் கூட்டமைப்பு உருவானது. குரோசியா, மாசிடோனியா, மான்டெனெக்ரோ, செர்பியா, ஸ்லோவேனியா, போஸ்னியா - ஹெர்செகோவினா ஆகிய தேசிய குடியரசுகளையும், சேர்பியாவுக்குள் அடங்கும் கொசோவா, வொஜ்வோடினா ஆகிய தன்னாட்சி பிராந்தியங்களையும் கொண்டது.

நாட்டின் பெரும்பான்மை இனமான சேர்பியர்களே அதிகாரத்திலும் இருக்கின்றனர். சோசலிச ரஷ்யாவும் அதற்கு எதிராக அமெரிக்காவும் இருமுகாம்களில் அணிதிரட்டிய வேளையில் அணிசேரா நாடுகள் என்ற கூட்டமைப்பை தோற்றுவித்ததில் யூகோஸ்லாவியாவினதும், டிட்டோவினதும் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. அணிசேரா நாடுகளிலொன்றான யூகோசிலாவியா தன் தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்கு நல்ல ஒரு அரசியல் தீர்வு கண்டுள்ளது என்று முன்பெல்லாம் பாராட்டினார்கள் மேற்குலக அரசியலாளர்கள். இன்று அந்த யூகோஸ்லாவியாவில் தான் பெரும்பான்மை சேர்பிய இனத்தவர்களுக்கு எதிராக சிறுபான்மை தேசிய இனங்களின் போராட்டம் வெடித்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தைம் சுதந்திர வர்த்தக வலயமாகவும், பண்ணாட்டு நிறுவனங்களாகவும் அந்நிய முதலீட்டாளர்களால் கைப்பற்றப்பட்ட நிலையில் அதிகரித்து வரும் வேலையில்

www.tamilarangam.net



லாத் திண்டாட்டமும், பணவீக்கமும், உயர்ந்து செல்லும் அந்நியக் கடனும் அதன் விளைவான விலைவாசியும் யூகோஸ்லாவிய மக்களை போராட்ட களத்தில் தள்ளியது. அத்தோடு பெரும்பான்மை சேர்பிய இனத்தின் குடியரசுகள் மீதான ஆதிக்கமும், கிழக்கு ஐரோப்பாவில் வீசி அடித்த ஜனநாயக புயலும், ரஷ்ய பால்டிக் குடியரசுகளின் தனிநாட்டு கோரிக்கைகளுமாய் சேர்ந்து யூகோஸ்லாவிய குடியரசு கட்டமைப்புகள் உடைந்து செல்லும் பிரிவினைப் போராட்டமாய் இன்று வெளிப்படுகின்றன.

சென்ற டிசம்பரில் குரோசிய குடியரசு பெரும்பான்மை சேர்பிய இனத்துடன் முரண்படத் தொடங்கியது. குடியரசுகளிடையே புதிய ஒப்பந்தம் ஏற்பட வேண்டும் அல்லது நாம் பிரிந்து போகப் போவதாக அறிவித்தது. இதற்கு பதிலாக குரோசியாவில் வாழும் 6 இலட்சம் சேர்பிய மக்களும் தனி குடியரசாக பிரிந்து செல்வார்களென சேர்பிய குடியரசு மிரட்டியது. இதிலிருந்துதான் சேர்பியர்களுக்கும் குரோசியர்களுக்குமிடையில் சண்டை தொடங்கியது. குரோசியாவிலுள்ள சேர்பியர்களுக்கு பெரும்பான்மை சேர்பிய இராணுவம் பின்புலமாய் ஆயுதங்கள் கொடுத்து உதவியது. இன்று நேரடியாகவே குரோசிய மக்கள் மீது பாய்ந்துள்ளது. "குரோசியாவில் வாழும் சேர்பியர்களுக்காக போராட சேர்பிய குடியரசுக்கோ யூகோஸ்லாவிய இராணுவத்துக்கோ உரிமை கிடையாது" என்றார் குரோசிய குடியரசு தலைவர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு முன்னணியில் இருந்தது ஸ்லோவினிய குடியரசின் போராட்டம் தான். இவர்களும் தாமும் யூகோஸ்லாவிய குடியரசு கட்டமைப்

www.tamilarangam.net



யிலிருந்து பிரிந்து போகப் போவதாகவும், நாம் ஐ.நா சபையில் தனியே அங்கம் வகிக்க விண்ணப்பிக்க போவதாகவும் தமது பாராளுமன்றத்தில் முடிவு செய்தனர். அத்தோடு தனியே நாணயம் அச்சடிக்க போவதாகவும் அறிவித்தனர். இதைத் தொடர்ந்து யூகோஸ்லோவிய இராணுவம் ஸ்லோவினிய குடியரசில் தாக்குதல்களில் இறங்கியது. குரோசியா, ஸ்லோவேனியா மட்டுமன்றி மாசிடோனியா, மான்டெனக்ரோ குடியரசுகளும் தாம் சேர்பிய குடியரசு கட்டமைப்பிலிருந்து அதாவது யூகோஸ்லோவிய கட்டமைப்பிலிருந்து பிரிந்து போகப் போவதாக அறிவித்தன.

சேர்பிய குடியரசின் தன்னாட்சி பிராந்தியமான கொசோவிலும் சேர்பிய ஆதிக்கத்துக்கு எதிராக கலகங்களில் இறங்கியுள்ளனர். தன்னாட்சி பிராந்தியங்களில் அதிகாரங்களை யூகோஸ்லோவிய அரசு பறித்தெடுக்கும் சட்டதிருத்தங்களை 88ம் ஆண்டு கொண்டு வந்த போது கொசோவில் எழுந்த உரிமைக்கான போராட்டங்களை யூகோஸ்லோவிய அரசு இராணுவத்தை கொண்டு அடக்கியது. இன்று எல்லா குடியரசுகளுமே பெரும்பான்மை சேர்பிய இனத்தின் மேலாதிக்கத்துக்கெதிராகவும் ஜனநாயக உரிமைகளுக்காகவும் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

“நாம் குரோசியர்களுக்கும் சேர்பியர்களுக்கும் இடையே உதைபந்தாய் இருக்கிறோம் என்றனர் கெர்செகோவினா குடியரசின் தலைவர்.” போசினியா-கெர்செகோவினா குடியரசில் பல தேசிய இனங்கள் கூட்டாய் சேர்ந்து வாழ்கின்றனர். இதில் முஸ்லிம் 47%, செர்பியன் 30%, குரோசியர் 18%. இங்கு பல் தேசிய இனக் கட்சிகளின் கூட்டரசு உண்டு.

www.tamilarangam.net



இன்று யூகோஸ்லாவிய குடியரசு கூட்டமைப்பு உடைந்து சிதறுகிறது. "நாம் எங்கே வாழ்கிறோம். இது எங்கள் நாடு தானே" என்று வெதும்புகிறார் ஒரு தொழிலாளி அந்த அளவுக்கு வாழ்நிலைமைகள் மோசமாகிவிட்டன. "எமது குடியரசுகளின் எல்லாப்பக்கமும் பழுதடைந்துவிட்டது எமது தெரிவுக்கு எதுவுமேயில்லை. எல்லாம் தலைகீழாய் ........ நாமெல்லோரும் ஒரு புதிய ஒப்பந்தத்துக்கு வரவேண்டும் என்றார் ஒரு குடியரசுத்தலைவர். செக்கோசெலவாக்கியாவின் பிரதமர் யூகோசிலாவியாவின் நிலைமைகளை விமர்சிக்கும் போது 'ஜனநாயகத்தை மறை செய்துவிட்டால் பிரச்சினைகள் தீர்ந்து விடும்" என்கிறார்.

உண்மையில் போராட்டத்தில் ஈடுபடும் இந்த யூகோஸ்சிலாவிய குடியரசுகள் எல்லாமே மேற்குலகின் உதவியை எதிர்பார்த்தே நிற்கின்றன. நாட்டிலே குடியரசுகளுக் கிடையே ஏற்பட்டுள்ள பிரச்சனைகளுக்கான தீர்வை காணும் நோக்கில் யூலை மாத இறுதியில் மாசிடோனியாவில் உட்ப்பட்ட 6 குடியரசுத்தலைவர்களின் கூட்டத்தில் குரோசியா குடியரசு தலைவர் வெளிநடப்பு செய்தார். ஐரோப்பிய பொருளாதார சமூகம் இன்றைய யூகோஸ்சிலாவியாவின் நெருக்கடிகளுக்கு அரசியல் தீர்வைகாணும் முயற்சியில் இறங்கியுள்ளது.

ஸ்லோவினிய குடியரசில் இருந்து யூகோஸ்லாவிய இராணுவம் திருப்பி அழைக்கப்பட்டு சேர்பியா, கிறோசியா எல்லைப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மொத்தத்தில் உள்நாட்டில் வலுத்துள்ள அரசியல் பொருளாதார நெருக்கடிகளுக்கு யூகோஸ்சிலாவிய மக்கள் தாமே ஒரு தீர்வை நோக்கிய பாதையில் செல்லாமல் மேற்குலகத்தினதும் குறிப்பாக ஐ. சமூகத்தின் தயவை நம்பிய போராடுகின்றனர்.

சி. அந்தன்

www.tamilarangam.net



ஈழத்தில் இருந்து ஒரு பிரசுரம்:

# இவர்களுமா துரோகிகள்?

தீப்பொறி அமைப்பைத் தாபித்தவர்களில் ஒருவரான கேசவன் உட்பட மொத்தம் 10 பேர் அண்மையில் புலிகளினால் 'கைது' செய்யப்பட்டுள்ளனர். மே17நள்ளிரவு சீருடையிலும், ஆயுதபாணிகளாகவும் காணப்பட்ட புலிகள் கேசவன் தங்கியிருந்த வீட்டைச் சுற்றி வளைத்து கேசவனைக் 'கைது' செய்தனர். இதைத் தொடர்ந்து மே21 நள்ளிரவு மீரா உட்பட 4 பெண்களும், யாழ் பல்கலைக்கழக மாணவர்களான சிறிநிவாசன் (கலைப்பீடம் 2ம் வருடம்), கோவிந்தராஜன் (கலைப்பீடம் 3ம் வருடம்) ஆகியோரும், இன்னும் 2 மாணவர்களும் (பெயர் தெரியவில்லை) புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டனர். மேலதிக உதவி அரசாங்க அதிபராக இருந்த கோவிந்தன் என்பவரும் புலிகளால் 'கைது' செய்யப்பட்டுள்ளார்.

ஈழத்து தமிழ் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவரான கேசவன் (நோபேட், கோவிந்தன், டொமினிக் என்ற பெயர்களிலும் அழைக்கப்பட்டவர்) மலையகத்தைப் பிறப்பிடமாக கொண்டவர். 70களில் கலை, இலக்கியப் பத்திரிகைத்துறையில் உழைத்தவர். அற்புதமான சிறுகதைகளை "தீர்த்தக்கரை" எனும் பத்திரிகையில் எழுதியவர். 80களில் புளொட் அமைப்பில் இணைந்துகொண்டு உழைத்தவர். தளப் பொறுப்பாளராகவும் செயற்பட்டவர். பின்னர் புளொட்டின் உட்கட்சி அராஜகம், படுகொலைகளினால் வெளியேறி "தீப்பொறி" அமைப்பினைத் தாபித்தவர். புகழ்பெற்ற "புதியதோர் உலகம்" நாவலையும் இக்காலப் பகுதியிலேயே எழுதினார்.

இவர்களைக் கைது செய்யும்போது "எங்களை மீறி வேலை செய்யக்கூடிய எவரையும் நாம் விட்டுவைக்க மாட்டோம். தீப்பொறியை முக்கியமான சக்திகளில் ஒன்றாகக்கருதுகிறோம். எனவே உங்களைக் கைது செய்கிறோம்" எனப் புலிகள் கூறியுள்ளனர். பல்கலைக்கழக மாணவர்களைக் 'கைது செய்த பின்னர் பல்கலைக்கழகத்தில் புலிகள் கூட்டமொன்றை கூட்டினர். அங்கு பேசிய புலிப் பிரமுகர் ஒருவர் 'கைதான' மாணவர்கள் மீது பொய்க்குற்றச்சாட்டுகள் பலவற்றைக் கூறினார். பின்னர் கூட்ட முடிவில் "கைதானவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட வேண்டும்?" என மாணவர்களைக் கேட்டார். நீண்ட நேர மௌனத்தின் பின் மாணவர் ஒருவர் துணிச்சலுடன் எழுந்து "இவர்களை மன்னித்துவிட முடியாதா? " எனக் கேட்டார். இதற்கு எதுவித பதிலுமில்லாமலேயே கூட்டம் முடிக்கப்பட்டது.

இக் 'கைது' பற்றி தமது பத்திரிகையில் எழுதிய புலிகள் 'பிடிபட்டவர்கள் — புளொட் துரோகக் கும்பலைச் சேர்ந்தவர்கள்' என அப்பட்டமாகப் பொய்க் காரணம் காட்டியுள்ளனர். புலிகளால் புளொட் தடைசெய்யப்படு முன்னரே புளொட்டின் அராஜகப் போக்குகளால் அதிலிருந்து வெளியேறியவர் கேசவன். புளொட்டுக்கு தலைமறைவாக இருந்துகொண்டே 85 முற்பகுதியில் புளொட் மீதான மாயையுள் இருந்த மக்கள் மத்தியில் அதன் அராஜகப்போக்கை அம்பலப்படுத்தும் கடினமான முயற்சியில் ஈடுபட்டவர். "தீப்பொறி" பத்திரிகை 2 இதழ்களுக்கூடாகவும், "புதியதோர் உலகம்" நாவல் மூலமும் புளொட்டின் அராஜகப்போக்கை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தவர். இதை மக்களும் அறிவர். புலிகளும் அறிவர். இப்படியிருக்க இவர் புளொட் அமைப்பைச் சேர்ந்தவரென காரணம் கற்பிப்பது விசமத்தனமானது. தமது உள்நோக்கம் கொண்ட செயலை வெளியில் நியாயப்படுத்துகின்ற முயற்சி.

புலிகள் யுத்தம் ஆரம்பமானதிலிருந்து இன்றுவரை என்.எல்.எவ்.ரி, பேரவை, பி.எல்.எவ்.ரி, தீப்பொறி அமைப்புகளைச் சார்ந்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்களும், மற்றும் இயக்கங்களிலிருந்து வெளியேறியிருந்தவர்கள், எதுவுமே அறியாதவர்கள்... என எல்லோருமாக சுமார் 200க்கு மேற்பட்டோரும் புலிகளால் கடத்தப்பட்டு 'காணாமற்' போயுள்ளனர். யாழ் பல்கலைக்கழக மாணவன் விமலேஸ்வரன் படுகொலையிலிருந்து இன்றைய 'கைதிகள்' வரை பிடிபட்ட/கொல்லப்பட்ட எவருமே இலங்கை/இந்திய அரசுகளுக்கு சார்பானவர்கள் அல்ல என்பதும், எவ்வகையிலும் 'துரோகிகள்' எனப் பட்டம் சூட்டமுடியாதவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் உயிரோடு இருக்கிறார்களா? இல்லையா? எங்கு 'சிறை' வைக்கப்பட்டிருக்கிறார்கள்? என்பது இவர்களது பெற்றோர், உறவினர்களுக்குக்கூட தெரியவருவதில்லை.

இத்தனைக்கும் இவர்கள் செய்த குற்றம்தான் என்ன?

www.tamilarangam.net



இந்திய அரசின் கெடுபிடி, இலங்கையரசின் ஒடுக்குமுறை, புலிகளின் ஜனனாயக மறுப்பு, மற்ற இயக்கங்களின் அட்டகாசம் என்பவற்றின் மத்தியிலும் சொந்த மண்ணில் வாழ்ந்தார்கள். விடுதலையை நேசித்தார்கள்.

இதுதான் இவர்கள் செய்த குற்றமா?

நாட்டின் தலைவிதியை எண்ணி ஏங்கும் நெஞ்சங்களே,

மக்களின் உண்மை விடுதலைக்கான முனைப்புகள் உயிருள்ளன என்ற உண்மையை உணருங்கள்.

இந்த முனைப்புகளுக்குப் புலிகள் தடையாக இருக்கிறார்கள் என்பதை உணருங்கள்.

உண்மையை உணர மறுப்பது, 'சோ லி வேண்டாம்' என்ற மனோபாவம் என்பவற்றிலிருந்து நாம் வெளியே வரவேண்டியுள்ளது என்பதை உணருங்கள்.

காலம் காலமாக பல நல்ல சக்திகளைத் தமிழினம் இழந்துகொண்டு வருகிறது. இதைக் கேட்டுப் பழகிப் போனவர்களாக ஆகிவிடாமல், இவற்றைத் தடுக்க உங்களால் இயன்ற அனைத்தையும் செய்யுங்கள்.

நண்பர்கள் (ஈழம் )

"... உண்மை என்றால் என்ன? நீங்கள் இன்று வழங்கும் தீர்ப்புத்தான் எக்காலத்திற்கும் பொருத்தமான எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஏக உண்மையா? அப்படியில்லை. உண்மை சார்பு நிலையானது. ஒவ்வொரு காலகட்டத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப உண்மை புதிது புதிதாக வரும். ஒரு காலத்தில் பூமி தட்டையாக இருந்ததென்ற கருத்து அக்காலத்தில் உண்மை மாத்திரமே. இன்றைய உண்மை பூமி உருண்டை என்பதே. நீங்கள் இன்று வழங்கும் தீர்ப்பு உங்கள் அளவில் மட்டுமே உண்மை. இந்த அடிப்படையில் பிரச்சினையை ஆராய கற்றுக்கொள்ளுங்கள். நாம் இப்போது பேசிக்கொண்டிருக்கும் விவகாரம் உங்கள் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்குட்பட்டதாகக் குறுக்கிவிடாதீர்கள். இது அரசியல் விவகாரம். முழு மக்களின் விவகாரம். இதில் விரிவான பார்வை அவசியம்.....

("புதியதோர் உலகம்" நாவல். பக்கம்: 350, 351)

[illegible] செய்து இப் பிரசுரத்தை உங்கள் நண்பர்களிடமும் பரவும்படி செய்யுங்கள்.

www.tamilarangam.net



# கருக்கல் பொழுது



● அருள்

வீட்டின் வடகிழக்கு மூலையில் அமைந்திருந்த கிணற்றின் தொப்பிக்கட்டின் அகன்ற பகுதியில் சம்மணம் கட்டி இருந்தான் அமலன். கையில் இருந்த பூவரசம் பூவின் ஒவ்வொரு தடிப்பான இதழும் கிணற்றுக்குள் சுழன்று சுழன்று சென்று விழுந்து கொண்டிருந்தன. மெதுவாக விடப்படும் ஒவ்வொரு இதழும் சுழன்ற வண்ணம் கீழே செல்லும் அழகு, சிலவேளைகளில் அவை இடையில் கிணற்றுச்சுவரில் மோதி, வேகம் குன்றி மீண்டும் ஒரு சிறு ஆட்டத்துடன் வேகம் பெற்று கீழ் நோக்கிச்சென்று நீரின் மேல் விழுந்து உருவாக்கும் நேர்த்தியான அலைவட்டங்கள். அந்த அலைவட்டங்களின் இடையே கப்பல் போல் மிதக்கும் அவன் கையிலிருந்து சென்ற இதழ்கள். அவனுக்கு மிகவும் பிடித்த விளையாட்டு இது. சிலவேளைகளில் சற்று ஆபத்தானதும் கூட. அம்மா கண்டாள் என்றால் ஏசுவாள். சமயங்களில் முதுகும் புளிக்கும். அம்மா வீட்டில் இல்லாத சமயங்களில் இந்த விளையாட்டு அவன் ஞாபகத்தில் வந்தால் அவன் தொப்பிக்கட்டிற்கு ஓடியே செல்வான். இன்று அம்மா வீட்டில் தான் இருந்தாள்.

www.tamilarangam.net



சரியான வேலையாக இருந்தாள். விடுமுறைக்கு பின்னர் நாளைக்
-கு அமலனுக்கு மீண்டும் பாட
-சாலை தொடங்குகின்றது. கா
-லையிலேயே அவனது உடுப்புக
-ளை கழுவி காயப் போட்டிருந்
-தாள். ஒவ்வொரு நாளும் அதி
-காலையில் எழுந்து உணவு தயா
-ரித்து சாப்பிடவும் கட்டவும்
கொடுப்பதற்காக, மாவை அவித்
-து அரித்து வைக்கும் வேலை
-யில் ஈடுபட்டிருந்தாள்.

அவளைப் பற்றியும் கொஞ்சம் சொல்ல வேண்டும். குடும்பத்தில் ஒரே மகள். அப்
-புவும் அம்மாவும் தந்து விட்டு
சென்ற வீடும் வளவும் அவளை
-ப்பொறுத்த வரை விலைமதிக்க
முடியாத சொத்துக்கள். இன்
-றுள்ள நிலையில் ஒரு காணி
வேண்டி வீடு கட்டுவதென்
-பதை அவளால் நினைக்கவே
முடியாது. இதற்காக பலமு
-றை நெஞ்சார தனது பெற்
-றோர்க்கு மனதிற்குள் நன்றி
சொல்லுவாள். சொந்தமாக கார்
வைத்திருந்து இன்று வாட
-கைக்கு கார் ஓட்டும் அவளது
-து கணவன். அவளுக்கு அம
லன் விட அவளது கணவனே
குழந்தை. அவரை நினைத்து
அவளுக்குப் பெருமை தான்.
ஆனால் அவரது அப்பாவித்
-தனத்தால் மற்றவர்களால்
ஏமாற்றப்பட்டு தன் முன்னே
தான் ஏமாந்ததை சொல்லி
நிற்கும் போது அவளுக்கு
அழுகை வந்துவிடும். பின்
தன் கணவனை தேற்றவேண்
-டிய கடமையை உணர்ந்து
அவனுக்கு ஆறுதல் கூறுவாள்.

எளிமையும் அன்பும் ததும்பும் அவர்களுடைய
வாழ்க்கைமாலையில் பதினொன்று
வருடங்களின் முன்னர் இய
-ற்கை இணைத்துவிட்ட முத்து
-த்தான் அமலன். சமூக, உலக
நடப்பிற்காக அக்கம் பக்கத்
-தவர்களின் உதவியுடன்
அவர்கள் வைத்த பெயர் தான்
அமலன். ஆனால் அவர்கள் ஒரு
போதும் அவனை 'அமலன்'

www.tamilarangam.net



என்று அழைத்தது கிடையாது. ராசா, அப்பன், செல்லம், பவுண், குட்டி, கண்ணன் என்று அவர்கள் அவனை அழைத்த அன்புப் பெயர்களில் 'குட்டி' என்ற பெயரே இன்று வரை அவனுக்கு நிலைத்து நிற்கும் பெயராகி விட்டது. அவனைத் தெரிந்தவர்களும் அவனது நண்பர்களும் அவனைக் 'குட்டி' என்றே அழைப்பார்கள். உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் நாமும் அவ்வாறே அழைக்கலாம்.

குட்டியின் கையில் இருந்த பூவரசம் பூவின் எல்லா இதழ்களும் இப்போது கிணற்றுக்குள் ஆடி அசைந்து கொண்டிருந்தன. மிஞ்சிய பூவின் பகுதியை கிணற்றுக்குள் எறிவோமா அல்லது வெளியில் வீசுவோமா என்று தன்னைக் கேட்டவன், திடீரென கிணற்றிற்கு மேலே செங்குத்தாக அதை எறிந்தான். அது மேலே சென்று மீண்டும் கீழ் நோக்கி வேகமாக கிணற்றினுள் சென்று விழுந்தது. ஏதோ திருப்தியடைந்தவன் போல் மெதுவாகச் சிரித்தான். மீண்டும் ஒரு பூவைப் பிடுங்கி விளையாட்டைத் தொடர மனம் விரும்பினாலும், பூவரசம் பூவிற்கு மேலாக, அதன் இதழ்கள் கிணற்றினுள் சுழன்று சுழன்று செல்லும் அழகிற்கு மேலாக, அந்த இதழ்கள் நீரின் மேற்பரப்பில் விழுந்து உருவாக்கும் அலைவட்டங்களிற்கு மேலாக அவனது பள்ளித் தோழன் ரகுவரன் வந்து நின்றான்.

சில மாதங்களுக்கு முன்னர் திடீரென காணமல் போன ரகுவரனை எதிர்பாராத விதமாக நேற்று சந்தியில் கண்டான். ரகுவரன் பாடசாலையில் படிக்கும் காலத்தில் குட்டியை எங்கு கண்டாலும் பாய்ந்து வந்து தோளில் கைபோட்டு, சத்தம் போட்டுக் கதைத்து அமர்க்

www.tamilarangam.net



-களைப்படுத்திவிடுவான். குட்டிக்கு இது மகிழ்ச்சியை அளித்திருக்கின்ற போதிலும் எனம் நினைந்த இடங்களில் ரகுவரன் இவ்வாறு செய்யும் போது குட்டிக்கு வெட்கம் வந்துவிடும். ஆனாலும் சில மாதங்களுக்கு முன்னர் ஒரு நாள் பாடசாலை முடிந்து மைதானத்தில் கால்பந்து விளையாடி அந்த கருக்கல் பொழுதில் ரகுவரன் அவனிடம் விடை பெற்றுச் சென்ற அந்த கடைசி நாள்வரை அவர்கள் நட்பு தொடரவே செய்தது. அன்று இரவு ரகுவரன் வீட்டிற்கு போகவில்லையென்பதும் அவன் எங்கேயோ சென்றுவிட்டதாக அவனது நண்பர்களும் ரகுவரனைத் தெரிந்த சனங்களும் கதைத்துக் கொண்டது பழைய விசயங்களாயினும் குட்டிக்கு அவை கல்லில் எழுதிய விசயங்கள். ரகுவரன் எங்கு சென்றிருப்பான் என்பதை ஊகிப்பதற்கு குட்டிக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அவன் எங்கு சென்றான் என்பதைப் பற்றி குட்டிக்கு கவலை இல்லை. ஆனால் அவன் தன்னை விட்டுப் பிரிந்து சென்றதில் குட்டிக்கு அதிக வருத்தம் இருக்கவே செய்தது. ஆனாலும் வீடு, பாடசாலை பொழுதுபோக்குகள் இவற்றிலும் அவன் தன் நண்பன் ரகுவரனை தொலைத்துவிடுவான். இருப்பினும், ரகுவரனுடன் பழகிய நாட்களின் நினைவுகள் அவனைச் சூழும் போது, அவனுடைய தோளில் கைபோடுவதற்காக எங்கிருந்தோ ரகுவரன் ஓடி வருவான்.

நேற்று ரகுவரனை காணநேர்ந்த போது குட்டிக்கு திகைப்பாக இருந்தது. தன் இரு கண்களையும் அகலத்திறந்து தன் நண்பனை முழுமையாகப் பார்த்தான். ரகுவரன் தனியே நிற்கவில்லை. அவனருகில் அவனுடைய புதிய நண்பர்களும் நின்றார்கள்.

www.tamilarangam.net



அவர்களுடைய உடைகளும் உடைமைகளும் அவர்கள் யார் என்பதை தெளிவாக காட்டியது. இதற்கு முன்னரும் குட்டி அவர்கள் அல்லது அவர்கள் சார்ந்தவர்கள் பலமுறை பார்த்திருக்கின்றன். அவர்களது நடமாட்டங்களும் நடவடிக்கைகளும் மற்றவர்களைப்போலவே குட்டியின் கவனத்தையும் ஈர்த்திருக்கின்றது. சில வேளைகளில் அவர்கள் மறையும்வரை அவர்கள் பார்த்துக் கொண்டு நின்றதுண்டு. அவர்கள் காணும் வேளைகளில் குட்டியின் மனம் சிறு எழுச்சி கொள்ளும். அவர்கள் சுமந்து செல்கின்ற உடைமைகள் குட்டியை பிரமிப்படையச் செய்யும். அவர்கள் பின்னால் இரண்டு அடியாவது நகர்வதற்கு மனம் துடிக்கும். அவர்கள் மறைந்ததும் குட்டியும் அவர்கள் மெதுவாக மறந்து விடுவான்.

ரகுவரன் அவர்களுடன் சேர்ந்து நின்ற போது அவர்கள் விட ரகுவரனே குட்டியை அதிகமாக ஈர்த்தான். ரகுவரன் குட்டியைப் பார்த்தான். ஆனால் ஓடி வந்து குட்டியின் தோளில் கை போடவில்லை. நின்ற இடத்திலிருந்தே புன்னகைத்தான். ஏதோ அளந்துதான் புன்னகைக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டில் இருப்பவன் போலிருந்தது அவனது புன்னகையின் வீச்சு.

குட்டிக்கு அப்புன்னகை திருப்தியை தராவிட்டாலும் தன் சந்தோசத்தையும் ஆவலையும் வெளிப்படுத்துவதற்காக கண்களில் நேசத்தை தாங்கி பெரிதாய்ச் சிரித்தான். ரகுவரன் இரண்டடிகள் முன்னோக்கி வந்து நின்றான். அவன் ஆவலுடன் நெருங்கினான் குட்டி. நீண்ட நாட்களின் பின்னர் ஒருவரை ஒருவர் மிக அருகில் பார்த்துக் கொண்டார்கள். அருகில் நின்ற ரகுவரனுடைய

www.tamilarangam.net



புதிய நண்பர்களின் பிரசன்னம் குட்டிக்கு ஒருவித உற்சாகத்தை கொடுத்தாலும் நண்பனுடன் கதைத்து விட வேண்டும் என்ற ஆவல் உற்சாகத்தை பின்னால் தள்ளியது.

"என்ன -- ரகுவரன் --"

"என்னடாப்பா குட்டி" கேட்டுவிட்டு ரகுவரன் அமைதியாக நின்றான். ரகுவரனின் குரல் மட்டுமல்ல, அவனிடமிருந்து அந்த வார்த்தைகள் வெளிவந்த விதமும் வித்தியாசமாக இருந்தன குட்டிக்கு. அவனுக்கு ஆச்சரியமாகவும் இருந்தது. வளவளவென்று இடைவிடாது எதையாவது அளந்து சிலவேளைகளில் தனக்கு எரிச்சல் வருமளவிற்கு கதைக்கும் ரகுவரன் இப்போது கதைக்கவே தெரியாதவன் போல முன்னால் நிற்கின்றான்.

"இவன் எப்படி மாறினான்? இவனுக்கு என்ன நடந்தது?" குட்டி தனக்குள் கேட்டுக் கொண்டான். தனது திகைப்பை வெளிக்காட்டாமல் குட்டி கேட்டான். "எப்படியிருக்கிறாய்? கனநாளாய்க் காணேல ---" ரகுவரன் குட்டியிடமிருந்து பார்வையை விலக்கி சந்தியை கடந்து சென்று கொண்டிருந்த ஒரு காரை உன்னிப்பாகப் பார்த்தவன், மீண்டும் குட்டியைப் பார்த்து சொன்னான். "இருக்கிறன் ----"

பின்னர் இருவரும் மௌனமாக நின்றார்கள். தன்னைப்பற்றி ஏதாவது கேட்பான் என்று எதிர்பார்த்த குட்டிக்கு ஏமாற்றமே. வேறு என்ன இவனுடன் கதைக்கலாம் என்று குட்டி கேள்வித் தேடலில் இறங்கிய போது அவர்கள் புறப்படத் தயாரானார்கள்.

"குட்டி, பிறகு சந்திப்பம் என்ன" கூறிவிட்டு செயற்கை அவசரத்தோடு அவ்விடத்தை விட்டு நகர்ந்து சென்றான் ரகுவரன். அவர்கள் போகும் திக்கையே பார்த்து நின்றான் குட்டி.

(தொடரும்)

www.tamilarangam.net



# ஏகாதிபத்தியங்களின் சதுரங்கத்தில்:

## குர்திஸ்தான்

♦♦ வளைகுடா யுத்தத்தை தொடர்ந்து ஈராக்கில் நிகழ்ந்த குர்திச மக்களினதும் இன்னும் பிற சிறுபான்மை தேசிய இனங்களினதும் உரிமைகளுக்கான போராட்டத்தை சதாம் குசைன் அரசு மூர்க்கமாக பாய்ந்து தாக்கியதன் விளைவாய் துருக்கி ஈரானில் தஞ்சம் புகுந்த இலட்சக்கணக்கான குர்திச மக்களின் அவலங்களை சென்ற இதழில் பார்த்தோம்----- ♦♦

குர்திச மக்களின் வாழ்வை கொடூரமாய் காயப்படுத்தும் முதல் நிகழ்வு 1514 இல் நிகழ்கிறது. இந்த ஆண்டில் தான் குர்திச மக்களின் பாரம்பரிய பிரதேசத்தை (குர்திஸ்தான்) துருக்கிய ஈரானிய மன்னர்கள் இரண்டாய் பிளந்து பங்கு போட்டனர். இங்கிருந்துதான் தொடங்கிறது குர்திச மக்களின் அவல வாழ்வு. ஒரு தேசிய இனம் கூறுபோடப்பட்டு இரண்டு பெரிய வல்லமை பெற்ற நாடுகளுடன் பொருத்தப்பட்டு சிறுபான்மையாக நசுக்கப்படும் கொடுமைகள். இத்தகைய குர்திச மக்களின் அவல வாழ்க்கைத் துருக்கியானது முதலாம் உலகயுத்தத்தின் பின்பு மீண்டும் கொடூரமாய் நீள்கிறது. ஆசியாவையும், ஆபிரிக்காவையும் காலனியாக்கிய இங்கிலாந்தும் பிரான்ஸும் அராபியப் பிராந்தியங்களிலும் தமது கால்களை அகலப் பதிக்கின்றன.

அதன் ஏற்கனவே இரண்டாகப் பிளக்கப்பட்டிருந்த குர்திஸ்தான் நாலாய் உடைத்து ஈரான், ஈராக், துருக்கி, சிரியா போன்ற நாடுகளுடன் ஒட்டிவிட்டனர். இந்த வரலாற்று இழிசெயலை "Sykes-Picot" ஒப்பந்தம் என்று வேறு அழைக்கின்றனர். 1916 ல் "Sykes" என்ற ஆங்கிலேய அரசியலாளரும் "Picot" என்ற பிரான்ஸ் நாட்டு ராஜதந்திரியும் திட்டம் தீட்டி போட்ட ஒப்பந்தமாதலால் இவ்

www.tamilarangam.net



ஒப்பந்தம் அவர்களின் பெயரைக் கொண்டே அழைக்கப்படுகிறது. அன்றிலிருந்து இன்றுவரை தாய் மண்ணைப் பறி கொடுத்து நாலு பெரிய கொல்லைக்குள் கட்டுப்படுகின்றனர் குர்திச மக்கள்.

குர்திச மக்களை இத்தகைய அவலங்களுக்குள் தள்ளி வீழ்த்திய நாசகார அரசியலுக்கும் அடிப்படையான காரணம் உண்டு. அதையும் நாம் அறிந்தாக வேண்டும். குர்திஸ்தானில் இயற்கை மூலவளங்கள் நிறைய உண்டு.- எண்ணெய் வயல் (வட ஈராக்கிய குர்திச பகுதி) இரும்பு, செப்பு, காரீயம், ஈயம், துத்த நாகம், குரோமியம் போன்ற உலோகங்கள் - இவ்வளவு மூலவளங்களை குர்திச மக்கள் தனி ஒரு தேசமாக ஆளத் தொடங்கிவிட்டால்; அது ஏனைய அரபிய நாடுகளுக்கு சவாலாகி விடும் என்ற நோக்கிலேயே அரபிய மன்னர்கள் தொடக்கம் ஐரோப்பியர்கள் வரை குர்திச மக்களை அவலப் படுத்துவதில் அக்கறையாய் செயற்படுகின்றனர். இதை இன்றுவரையான குர்திச மக்களின் வாழ் நிலையில் இருந்து நாம் விளங்கிக் கொள்ளமுடியும்.

துருக்கியில் வாழும் பன்னிரண்டு மில்லியன் குர்திச மக்களும் அரசின் பயங்கர ஒடுக்கு முறைக்கு ஆளாகிறார்கள். உலகில் மனித உரிமை மீறல் போட்டியில் தென்னாபிரிக்காவை போன்று துருக்கியும் தீவிரமாக பங்கு பற்றும் ஒரு நாடு. 1923ம் ஆண்டிலேயே தடை செய்யப்பட்ட தாய் மொழியில் பேசும் உரிமை; 1991 ஜனவரியில் அதுவும் வளைகுடா யுத்த நெருக்கடிகளால் வழங்கப்பட்டது. மேலும் திட்டமிட்ட பொருளாதார நிலையங்கள், குடியேற்றங்கள் மூலம் அவர்களது பாரம்பரிய பிரதேசங்களை அபகரித்து வருகிறது. புராதன குர்திச பிரதேசங்களுக்கு துருக்கிய பெயர்களை புகுத்துகிறது. கொடூர இராணுவ அடக்கு முறைகளை ஏவி குர்திச மக்களின் அரசியல் விழிப்புணர்வை நசுக்கி வருகிறது. மொத்தத்தில் துருக்கிய அரசானது குர்திஸ்தானியர்களின் அரசியல்

www.tamilarangam.net



பொருளாதார கலாச்சாரத் தளங்கள் அனைத்தையும் உடைத்து நொருக்கிறது.

நவீன துருக்கியின் தந்தையாக வர்ணிக்கப்படும் முஸ்தபா கமால் குர்திஸ் மக்களின் வரலாற்றில் மறக்கப்பட முடியாதவர். இவர் தான் 1918ல் குர்திஸ் மக்களுக்கு தன்னாடு உருவாக்குவதென துருக்கிய அரசு கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை கிழித்தெறிந்து குர்திஸ் மக்கள் மீதான ஒடுக்கு முறையை தொடக்கி வைத்தவர்.

துருக்கியில் வாழும் குர்திஸ் மக்களின் சுதந்திரத்துக்காக குர்திஸ் தொழிலாளர்கட்சி ஆயுதம் ஏந்திப் போராடுகிறது. அரசின் ஒடுக்குமுறையும் தொடர்ச்சியாகவே தொடர்கிறது. கம்யூனிஸ்டுகளின் கூட்டு முன்னணி சென்ற யூலையில் அரசால் தடை செய்யப்பட்டமை இதற்கு மேலும் ஆதாரமாகிறது.

ஈரானிலும், சிரியாவிலும் வாழும் குர்திஸ் மக்கள் துருக்கியில் வாழும் மக்களளவுக்கு ஒடுக்கப்படவில்லை ஆயினும் இவர்களது உரிமைகளும் எழுத்தளவிலேயே இருக்கின்றன. ஏனெனில் இவர்களில் 50% மானோர் தாய்மொழியில் எழுதத் தெரியாதவர்களாகவும் 80 - 90% மானோர் தாய்மொழியில் பரிச்சயமற்றவர்களாகவே இருக்கின்றனர். ரஷ்யாவில் குர்திஸ் மக்கள் பல்வேறுபட்ட குடியரசுகளில் வாழ்கின்றனர். ஒப்பீட்டளவில் இருபத்தியாறு கோடி சனத்தொகை கொண்ட ரஷ்யாவில் வாழும் நான்கு இலட்சம் குர்திஸ் மக்கள் தமது தனித்துவங்களையும், கலாச்சாரங்களையும் பேணி வளர்க்கக்கூடிய அரசியல் அமைப்பு உண்டு. ரஷ்யாவுக்கு அடுத்தாய் ஈராக்கில் வாழும் குர்திஸ் மக்கள் தமது மொழி கலாச்சாரத் தனித்துவங்களை பேணி வளர்க்கக்கூடிய நிலை ஓரளவு உண்டு. உண்மையில் ஈராக்கிய குர்திஸ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்காக தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

1930 ல் ஈராக் ஆங்கிலேயர் பிடியில் இருந்து விலகும் போதே ஈராக்கிய அரசின் குர்திஸ் மக்கள் மீதான தாக்குதல்களும் தொடங்கின்றன. 1946 ஆம் ஆண்டில் குர்திஸ் ஜனநாயக கட்சி (D.P.K) தோற்றத்தோடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குர்திஸ மக்கள் ஈராக்கிய அரசுக்கெதிரான போர்களத்தில் குதிக்கின்றனர். 58ல் ஜெனரல் Karim kassem அரச பரம்பரை ஆட்சியை உடைத்தெறிகிறார். இவர் சிறுபான்மை தேசிய இனங்களின் சமூக கலாச்சார உரிமைகளுக்கு மதிப்பளிக்கிறார். இவனின் ஆட்சியில் குர்திஸ மக்களின் குரல் பலமாகிறது. பல பத்திரிகைகளில் வெளிவருகிறது. பல்கலைக்கழகம் வரை கல்வி கற்பதற்கான வாய்ப்பு கிட்டுகின்றன. குர்திஸ மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் தொடர்ந்தும் நடாத்துகின்றனர்.

1960 ம் ஆண்டில் ஜெனரல் கசாம் குர்திஸ மக்களின் நியாயமான போராட்டங்களை மறுதலித்து ஐக்கிய ஈராக் என்ற முழக்கத்தோடு குர்திஸ மக்கள் மீது இராணுவ அடக்கு முறையை கட்டவிழ்த்து விடுகிறான். 1961ல் குர்திஸ்தானியர்கள் கசாமுக்கு எதிரான போராட்டத்தில் இறங்கினர். 1963 ல் ஜெனரல் கசாமின் ஆட்சியை கவிழ்த்து ஜெனரல் மார்ஷல் ஆரிவ் குர்திஸ மக்களுக்கு எதிரான போராட்டத்தை தொடர்கிறார். 64 ல் அரசும் குர்திஸ ஜனநாயகக் கட்சியும் (DPK) யுத்த நிறுத்தத்துக்கு வருகிறது. இதை யுத்த நிறுத்தம் என்பதை விட DPK தலைவர் அரசிடம் போராட்டத்தை தாரை வார்த்தார் என்பதே பொருத்தமானது. இந்த நடவடிக்கையால் கட்சியில் இருந்து வெளியேறிய Jala Tala Bazani (Puk) தாய் நாட்டு ஐக்கிய முன்னணியை தோற்றுவித்து ஈரானை மின்தளமாக கொண்டு கெரில்லா யுத்தத்தில் குதிக்கின்றார்.

எமது மண்ணில் நிகழ்வது போலவே இங்கும் இயக்க கட்சிப் போட்டிகள் ஆயுத முனையில் நிகழ்கின்றன. பின்னைய காலத்தில் DPK யும் Puk ம் ஐக்கியப்பட்டு நடாத்திய யுத்தத்தில் குர்திஸ பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டன.

ஈராக்கிலேயே எண்ணெய் வயல்கள் நிறைந்த பகுதி குர்திஸ் மக்களின் பிரதேசம் தான். அது அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதால். அரசுக்கு பொருளாதார நெருக்கடிகள் ஏற்

www.tamilarangam.net



பெற்றதால் போராளிகளுடன் 70 ல் ஒரு உடன்பாட்டுக்கு வந்தது பாக்தாத் அரசு. இந்த ஒப்பந்தம் குர்திஸ்தானியர்களுக்கு அவர்களே சுயாட்சி செலுத்தக் கூடிய ஒரு பகுதியை வட ஈராக்கில் தருவதாக உறுதியளித்தது. ஆயினும் தலைவர்கள் அரசபம் மண்மயிட்ட நிலையில் இந்த ஒப்பந்தம், வலுவிழந்து போகவும்---- 1974 ஏப்ரலில் அரசுக்கும் போராளிகளுக்கும் இடையில் யுத்தம் வெடித்தது.

இந்த சமகாலத்தில் ஈரானில் மன்னர் ஷாவின் ஆட்சி... 'ஷா' எப்பொழுதுமே குர்திஸ்தானியர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்துக்கு எதிராகவே இருந்தான். இவன் ஈராக்கின் தற்போதைய ஜனாதிபதி சதாமுக்கு குர்திஸ் மக்கள்மீதான தாக்குதலுக்கு புதுரு துவக்கிக் கொடுத்தான். அமரிக்காவுடனும் இஸ்ரேலுடனும் சேர்ந்து ஈராக்கில் இராணுவ பலத்தை முறியடிக்க குர்திஸ்தானியர்களின் போராட்டத்தையும் போராட்ட சக்திகளையும் பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது. ஈரான்-ஈராக் யுத்தத்தின் போது ஈரான் மீண்டும் DPK , UPK ஆகிய இரண்டு போராட்ட அமைப்புகளுக்கும் ஆயுத உதவிகளை வழங்கியது.


1986 ம் ஆண்டில் சதாமும் பாத் கட்சியும் நிகழ்த்திய சிறுபான்மை இனத்தவர்கள் மீதான கொடூர இராணுவத் தாக்குதல்களில் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான குர்திஸ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஐயாயிரத்துக்கும் அதிகமான கிராமங்கள் நாசமாக்கப்பட்டன. இரண்டு லட்சம் பேர் விட்டிழந்து போயினர். இதுவரை குர்திஸ் மக்களை அழிப்பதற்காக ஏழு யுத்தங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஆயினும் இந்த மேற்குலகம் வாய்பேசி மௌனித்தே வந்தது. ஆயினும் இன்று மட்டும் ஏன்? விழுந்தடித்து பச்சைக் கொடிகாட்டுகிறது.

இன்று மேற்கு உலகம் குவுந்தி அழும் குர்திஸ் மக்களின் அகதிப் படையெடுப்பு அவலமானது தான். ஆனால் அமரிக்க ஐரோப்பிய நாடுகள் இதில் தலையிடுவது; குர்திஸ் மக்களின் நியாயமான

www.tamilarangam.net



போராட்டத்தை ஆதரிக்கவோ அல்லது ஒரு அரசியல் தீர்வை கண்டு கொள்வதற்காகவோ அல்ல; மாறாக சதாமை அடிபணிய வைக்கவும் நீறுபூத்த நெருப்பாக இருக்கும் பாலஸ்தீனப் பிரச்சனையை அமுக்கவுமே. இதை உறுதிப்படுத்துவதாகவே பின்னைய நிகழ்வுகள் அமைகின்றன. வளைகுடா யுத்தத்தின் பின்பு சதாமுக்கு எதிராக குர்திஸ் போராளிகள் ஆறுவாரங்கள் யுத்தத்தில் ஈடுபட்டனர். இவர்களுக்கான உதவிகள் அமரிக்க கூட்டுப்படைகளிடம் இருந்தும் கிடைத்தன. ஆயினும் சதாம் மூர்க்கமாக பாய்ந்து தாக்கி குர்திஸ் மக்களின் நியாயமான போராட்டத்தை அடக்கிவிட்டார். இதைக் கண்ட அமரிக்காவும், ஐரோப்பிய சமூகமும் கிறின்விச் மத்திய கோட்டின்படி 36° இல் வட ஈராக்கில் குர்திஸ பிரதேசத்தை பாதுகாப்பு பிரதேசமாக அறிவித்தனர். பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அகதிகளை மறுபடி குடியமர்த்தவும் அறுமுகாம்களை கட்டப் போவதாக கூறி அமரிக்க கூட்டுப் படைகள் வட ஈராக்கில் நுழைந்தன. இப்போது சதாமுக்கெதிரான இராணுவ அச்சுறுத்தல்களிலும் இறங்கியுள்ளன.




இதற்கிடையில் சதாம் குசைன் எழுபதாம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையிலான சுயாட்சி செலுத்தக் கூடிய அதிகாரங்களுடனான ஒரு மாகாண அமைப்பு தருவதாக குர்திஸ் தலைவர்களுக்கு வாக்குறுதியளித்துள்ளார். இதற்கான பேச்சுவார்த்தைகளும் நடந்தன.

www.tamilarangam.net



ஆனால் குர்திஸ் மக்களுக்கு இப்படி ஒரு அரசியல் தீர்வு ஏற்படும் பட்சத்தில் அது ஏனைய நாட்டு குர்திஸ்தானியர்களுக்கும் ஒரு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்றும்- -, பிற்பட்ட காலங்களில் அந் நாட்டு அரசுகளுக்கு பெரும் தலையிடியாய் அமையும் என்றும் துருக்கி சிரியா போன்ற அரசுகள் இப்பவே சிந்திக்கத் தொடங்கி விட்டன. ஏனெனில் துருக்கி ஜனாதிபதி "ஒரு போதும் நான் மாகாண சுயாட்சியை துருக்கி குர்திஸ்தானியர்களுக்கு வழங்க மாட்டேன்" என்று அறிவித்திருக்கிறார்

அமெரிக்காவை பொறுத்தவரை தனது கூட்டாளிகளான இஸ்ரேல் மேற்கு காசா பகுதியிலும், பிரித்தானியா வட அயர்லாந்திலும் ஆக்கிரமித்திருப்பது போலவே தானும் வட ஈராக்கை வைத்திருக்க விரும்புகின்றது. இதற்கு குர்திஸ் மக்களை பகடைக்காய்களாக பயன் படுத்துகிறது. சதாம் குசைன் தான் வாக்குறுதியளித்தது போல் குர்திஸ் மக்களுக்கு மகாண ஆட்சி வழங்குவாராயின்; அமெரிக்காவின் திட்டத்துக்கு மண்ணை அள்ளிப் போட்டதாய் முடிந்துவிடும். அதனால் அமெரிக்கா உள்ளிட்டு இதை எப்படியும் குழப்பவே முயற்சிக்கும்.

அதே வேளை சதாம் குசைன் தென் கொரியாவிடம் இருந்தும் சீனாவிடம் இருந்தும் இராணுவ உதவிகள் பெற்று நலிந்து போன தன் இராணுவத்தை மீண்டும் புனரமைக்க முயற்சிக்கிறார் இதையறிந்த அமெரிக்கா ஈராக் மீண்டும் அணு ஆயுத உற்பத்தியில் இறங்குவதாகவும், இதைத் தான் அனுமதிக்க முடியாதெனவும் எப்படியும் தாக்குதல் நிகழ்த்தப் போவதாகவும் அறிவித்தது. ஐரோப்பிய சமூகமும் ஒத்துப் பாடியது. இதைத் தொடர்ந்து ஐ.நா அணு ஆயுத பரிசோதனைக் குழுவும் ஈராக் சென்று பரிசோதனை செய்கிறது.

ஈராக் குர்திஸ் மக்களின் வரலாற்றுப் படிப்பினைகளை பார்க்கும் போது போராளிகள் அந்நிய சக்திகளில் தங்கிப்

► 49 ம் பக்கம்

www.tamilarangam.net



# அகதிகள் உருவாக்கமும் அடிப்படை உண்மைகளும்

உலகளாவிய பெரிய பிரச்சனைகளில் ஒன்றான அகதிகள் பிரச்சனை இன்னமும் தீர்வு காணப்படாமல் நீண்டு கொண்டே போகிறது. உலக முழு அகதிகளாக 16 மில்லியன் மக்களை UNO அகதிகள் பகுதி நிர்ணயிக்கின்றது. படு மோசமாகிக் கொண்டிருக்கும் அபிவிருத்தியடைந்து வரும் மூன்றாம் உலக நாடுகளில் மாத்திரமல்ல; பொருளாதாரம், தொழில் விருத்தியடைந்த நாடுகளிலும் தனது தாக்கத்தை மிகத் தெளிவாகவே காட்டுகின்றது.

ஏற்கனவே ஐரோப்பாவில் இருந்து வந்த வெளிநாட்டவருக்கெதிரான உணர்வு கூர்மையடைந்து வருகிறது. வெளிநாட்டவரை அகதிகளாக தங்களது நாடுகளில் இனியும் ஏற்றுக் கொள்ள முடியாதென்ற வாதத்துடன் ஐரோப்பிய நாடுகளும், ஏனைய நாடுகளும் தங்களது எல்லைகளை அகதிகளின் ஊடுருவலிருந்து பாதுகாக்க உரிய நடவடிக்கைகளில் இறங்கி விட்டன. அகதிகளின் உருவாக்கம், அவர்களது புலப்பெயர்வு இவைகளை நிர்ணயிக்கும் காரணங்கள் மேலோட்டமாக உள்நாட்டு அரசியல் நிகழ்வுகள் தான் என கணிக்கப்பட்டாலும்; சர்வதேச ரீதியில் உலக சந்தையும், சந்தை வியாபார முறையும் அதனை நிலை நிறுத்த எடுத்த எண்ணற்ற நடவடிக்கைகள் பிரதான காரணமாக திகழ்கிறது. அதேவேளை இயற்கை அழிப்பு, இயற்கை அழிவு, சமுதாயத்தின் மனநிலை, அகதிகளுக்கான நீண்ட கால உதவி, என்பன கூட; உருவாகிய அகதிகளை அகதிகளாகவே வாழத் தூண்டுகின்றன.

இக்காரணங்களில் முதலாவதாக சந்தை வியாபார முறையை ஆராய்கையில்; காலனித்துவ காலம் வரை ஒவ்வொரு

www.tamilarangam.net



காலனித்துவ நாடும் தனது மக்களின் உணவுத் தேவையை சுயமான உற்பத்தியில் பூர்த்தி செய்யக் கூடிய திறனைப் பெற்றிருந்தது. ஒவ்வொரு நாட்டு மக்களும் தங்களது இயற்கையை ஒட்டிய விளை பொருட்களை உணவாகவும், பருவகால விளைவுகளை இயற்கையுடன் ஒன்றித்த முறையில் சேகரிக்கவும் பழகிக் கொண்டனர். உணவுத்தேவைக்காக மேலதிகமாக இன்னுமொரு நாட்டில் தங்கியிருக்கும் தன்மை காணப்பட்டாலும், தங்களது உற்பத்திக்கு கைமாறாகவே பிற உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொண்டனர். இதனால் உற்பத்தியினதும், சந்தையினதும் நிர்ணயம் சம நிலையிலிருந்ததன்றி ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தி நாட்டின் உணவு விநியோகத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தவில்லை.

காலனித்துவ காலத்தில் விதைக்கப்பட்ட போட்டி சந்தை முறை வியாபாரத்தை நோக்கின்; ஆரம்ப காலத்தில் இருந்து வந்த சமூக அமைப்பில் ஒவ்வொரு தொழில் பிரிவைச் சேர்ந்த மக்களும் தங்களது உற்பத்தியை; தேவைகளை கணித்தே செய்து வந்ததும், சிறிய, மத்திய சந்தைகள் யாவும் உற்பத்தியாளனும் நுகர்வோரும் கூடும் சந்தையாகவே தொழிற்பட்டு வந்தது. இங்கே தேவைக்கதிகமான உற்பத்தியின் அளவு கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்பட்டிருந்ததுடன், அத்தியாவசிய உற்பத்தியின் விலையும். மக்களின் நுகர்வும் ஏறத்தாழ ஒரு சமநிலையை சரிசெய்து கொள்ளக்கூடியதாகவும் இருந்தது.

போட்டிச் சந்தை முறை வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட சமூகப் பகுதியினர் குறிப்பிட்ட பொருளை பாரம்பரியமாக உற்பத்தி செய்வது குலைக்கப்பட்டு எவரும் எதனையும் உற்பத்தி செய்யலாம் என்ற நிலை வந்தடைந்தது. அத்துடன் தேவைகருதிய உற்பத்தியின்றி இலாபம் கருதிய உற்பத்தியாகப் பரிணமித்ததுடன் 'முதல்' இன் தொழிற்பாடும் இங்கு ஆரம்பமாகியது. முன்பு போல் பாரம்பரிய உற்பத்திக்கு அந்த தொழிலைப் பற்றிய குறிப்பிட்டவை அறிவுமாத்திரம் இருந்தால் போதாது அதற்கான முதலும்

www.tamilarangam.net



தேவை என்ற நிலை ஏற்பட்டு முதல் உள்ளவன் தொழில் அற்றவனை பயன்படுத்தக் கூடிய நிலையையும் வகுத்தது இதனால் போட்டி அதிகரித்ததுடன் முதலில் தங்கியிருக்க வேண்டிய நிலையும் உருவாகியது. இதுவரை காலமும் இல்லாத ஒரு புதிய மிகவுயர்வான பரிமாணத்தை முதல் பெற்றது. அது தனக்கென சில விதிமுறைகளை வகுத்துக் கொண்டு மனித சமூகத்தை தன்பிடியுள் சிக்க வைத்துக் கொண்டது. வியாபாரமாக பரிணமித்த ஆரம்ப காலச் சந்தை முறை முதல் பாதுகாத்து வளர்த்தது. இந்த புதிய திருப்பத்தாலும் காலனித்துவ வியாபார நோக்கங்களின் வீச்சத்தாலும் பாரம்பரிய உற்பத்தி முறை மாத்திரமன்றி மக்களின் மனோநிலை, உணவு, வாழ்வுமுறை என்பதிலும் பெரியதொரு ஆதிக்கத்தை நிர்ணயித்தது. மேற்குலகந்தான் எல்லாவற்றிலும் சிறந்தது "நாகரிகமானது" என்ற கருத்துப்படலத்தின் செறிவான பரவல் மேற்குலக நாடுகளின் வியாபார நோக்குகளை மிக எளிதாக சாதிக்க வழி வகுத்தது. கலாச்சாரங்களின் மாற்றங்கள் மேற்கை மையமாக கொள்ளத் தொடங்கியதுடன் தொழிற்புரட்சி, இயந்திரமயமாக்கல், எலக்ரோனிக்கல் மயமாக்கல் போன்றன கூட மக்களின் மனோநிலையை மேற்கில் தங்கியிருக்கும் மனப்பான்மையை வளர்த்தது. ஆக மொத்தத்தில் கிழக்கும் வடக்கும் (புவியல் ரீதியாகவல்ல) எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வுகளுக்கும் மேற்கை நோக்கி அண்ணார வைத்து சொந்த அடையாளம், ஆன்மிக பலம் என்பவற்றை அடியோடு அகழ்ந்தெடுத்து ஒரு அனாதை மனப்பான்மை மிக மெதுவாக ஆனால் வலுவாக வளர்த்தெடுப்பதில் வெற்றி கண்டது மேற்குலகம்.

ஆக மொத்தத்தில் சொந்த உற்பத்தித் திறனால் இயற்கையாக வளையும் அல்லது பெறக்கூடிய உணவுப் பொருட்களில் பல உணவுத் தட்டிலிருந்து மறைந்ததுடன் கிடைக்கும் உணவுப் பொருட்களும் போட்டி வியாபார முறைக்குள் புகுத்தப்பட்டு விட்டன.

இவ்வாறாக ஒரு சாதாரண மனிதனின் உணவுத் தட்டில் எது உணவாக வழங்கப்பட வேண்டும் அதனது விலை என்ன?

www.tamilarangam.net



என்பதைக் கூட உலக சந்தையும் அதன் வங்கியாளர்களும் நிர்ணயிக்கும் அளவுக்கு நிலைமையை 'சீர்' செய்து விட்டார்கள் உலக சந்தை மேதைகள்.

பொருளுற்பத்தியிலும்; அதனை இலாப நோக்கிற்காக திசை திருப்பிக் கொண்ட இம் மேதைகள் இரண்டாவது உலகமகாயுத்தத்தில் நலிவடைந்து போன முதல் சார் பொருளாதாரத்தை முண்டு கொடுத்து நிறுத்தவும் அதற்கான "உதவிகளை"ச் செய்யவும் முனைந்து கொண்டனர். இங்குதான் 'அபிவிருத்தி' என்ற புதிய சொல்லையும், அதன் தொழிற்பாட்டையும், கண்டறிந்து கொண்டதுடன்; உற்பத்தி, தொழிற்சாலைப், போட்டி வியாபார முறை, விளம்பரம், நிர்வாகம், தொழிலாளர் என்ற எந்த தொல்லைகளுமில்லாமல் "கடன்" கொடுக்கும் நிறுவனங்களை தங்கள் மூளைகளின் பலத்தால் பெற்றெடுத்தனர். ஆரம்பத்தில் உள்நாட்டு தேசிய நிலைகளில் வளர்ந்து, தவழ்ந்து பழகிக் கொண்ட இக் குழந்தை தனது நடையை அபிவிருத்தியடையப் பணிக்கப்பட்ட ஏழை நாடுகளில் காலடிகளை மிக நிதானத்துடன் பதித்து பின்பு எந்தக் கவலையுமில்லாமல் நடை பழகிக் கொண்டது.

ஏற்கனவே எல்லா விதங்களிலும் தங்கள் இழப்புகளை மாத்திரம் பெருக்கிக் கொண்ட இந்த நாடுகள் உலக சந்தையின் அன்பான அரவணைப்புப் பிடிக்குள் இறுகியதுடன் கடன் கொடுக்கும் நிறுவனங்களின் கருணையையும் பெற்று "வாழத் தொடங்கியது" எங்கோ இருக்கும் இம் மூளைசாலிகள் எப்படி ஏழை நாடுகளின் மக்களை அனாதைகளாக்கினார்கள் என்பதை அடுத்த இதழில் பார்ப்போம்.

• தேவா •

---

◄ 45 ம் பக்கம்

போரிடுவதும் அவர்கள் காலை வாரும் போது பேச்சு வார்த்தை என்ற நாடகத்தில் போராட்டத்தை தாரை வார்த்து விடுவதும் தொடர்ச்சியான நிகழ்வுகளாகவுள்ளன. இத்தகைய பலவீனமான நிலையை ஆதிக்க சக்திகள் இலகுவாய் பயன்படுத்திக் கொள்வதால் குர்திஸ் மக்களின் பல நூற்றாண்டுகால போராட்ட வரலாறு மீண்டும் மீண்டும் இழப்புகளாய் தொடர்கிறது.

• க. தீபன்

www.tamilarangam.net





# ஞானக்கூத்தருடன்....

"தலைக்கு மேலே வெள்ளம் போனால் முழம் என்ன சாண் என்ன?"....
அறை வாசலில் பழைய பாடலின் வரிகளைக் கேட்டுத் திரும்பினேன் ஞானக் கூத்தர் தான் நின்றிருந்தார். "என்ன கூத்தர் பழைய பாடலை முணுமுணுத்துக் கொண்டு வாறீர் ஏதாவது விசேசம் உண்டா" என்றேன் நான்.

[ ஞானக்கூத்தரை 'கூத்தர்' என செல்லமாக அழைப்போம்]

"ஏன் பாடக் கூடாதோ" என்றார் கூத்தர்.

"இல்லை உமது வாயில அந்த வரிகள் சும்மா நுழைஞ்சிருக்காது"? என்றேன் நான். இன்று அரசியல் விடயங்கள், மற்றும் சமூக நிகழ்வுகளைப் பற்றி கதைப்பதையே தவிர்த்துக் கொள்ளுகிற சூழலில் ஞானக் கூத்தர் எம்மைத் தேடி வருவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அவர் கூறும் விடயங்களையும், அவருடனான விவாதங்களையும் நானும் ஒரு சில நண்பர்களும் முகம் கொடுப்பது தான் அந்த காரணம் வரும் போதே ஏதாவது பாடலையோ அல்லது பழமொழியையோ முணு முணுத்துக் கொண்டுதான் வருவார் அதன் பின்னால் ஏதாவது அர்த்தம் இருக்கும் அதனால் தான் நானும் ஏதாவது விசேசமுண்டா என்ற கேள்வியை போட்டேன்.

" கொழும்பில் அண்மையில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவம் பற்றி கேள்விப்பட்டாயா?" பதில் கேள்வியைப் போட்டார் கூத்தர்

"கேள்விப்பட்டேன்; அது சரி குண்டு வெடிப்புக்கும் நீர் பாடிய பாட்டுக்கும் என்ன சம்பந்தம்?"

"குண்டு வெடிப்பு நடந்தது சாதாரண இடத்தில இல்லை. கூட்டுப்

www.tamilarangam.net



படைத் தலைமைச் செயலகத்தில். அரசாங்கம் பாதுகாப்புச் செலவி னங்களுக்கு கோடி கோடியாக ஒதுக்கி பாதுகாப்பைத் தேடி னாலும் தலைக்கு வாற ஆபத்தைத் தடுக்க முடியவில்லை. என்பதை இது காட்டுகிறது. அது மட்டுமல்ல அரசாங்கத்தின் பாணியில் சொல் வதானால் 'பயங்கரவாதம் வீட்டு வாசலுக்கே வந்துவிட்டது" ஆனால் அரசு பிரச்சனையை தீர்க்கப்போவதாக பாவனை பண்ணிக் கொண்டிருக்கிறது. இந்தப் பின்னணியில் குண்டு வெடிப்பு சம்பவத்தை நினைத்துப் பார்க்கை யில் இந்தப் பாடல் வரிகள்தான் ஞாபகத்துக்கு வந்தது அதுதான் பாடி னேன்" என்றார். ஒரு முறையாவது அவரின் இந்த சிலேடையை கண்டு பிடிப்பதாக சவால் விட்டு விட்டு தொடர்ந்து;

"தாக்குதலை நடத்தியது புலியள் என்று தானே கதைக்கினம்." என இழுத்தேன்.

" இருக்கலாம்.... ஆனால் தாக்குதல் அரசை திணறடித்து விட்டது என்பது உண்மை. தாக்குதல் நடந்த காலகட்டத்தில் தான் கிழக்கு மாகாணத்தில் கொக்கட்டிச் சோலைப் பயங்கரம் நிகழ்ந்தது. அதனை திசை திருப்புவதற்காக இதனைச் செய்திருக்கலாம் அல்லது அரசை பேச்சுவார்த்தைக்கிழுப்பதற்கான முயற்சிகளில் ஒன்றாக இருக்கலாம் எப்படி இருப்பினும் செய்யப்பட்ட நடவடிக்கை சரியானதே".

"என்றாலும்.... இந்த நடவடிக்கையை கொழும்பில் செய்திருக்க வேணுமா?"

"நீ ஏன் இப்படிக் கேட்கிறாய் என புரிகிறது. தற்போது வடக்கிலிருந்து பல தமிழர்கள் குறிப்பாக இளைஞர்கள் வந்து குவிந்திருக்கிற இடம் என்றபடியால் தவிர்த்திருக்கலாம் என்கிறாய்"....

"அதே தான்" என்றேன் நான். கூடவே இதற்கு பதிலடி தரப் போகிறார் என்பதும் விளங்கியது. அறைக்கு வந்திருந்த இன்னொரு விருந் தினர் தனக்கும் இதுக்கும் சம்பந்தம் இல்லை என்பது போல் பாவ னை பண்ணிக் கொண்டாலும் அவரது செவிகள் எம்மை நோக்கி யே இருந்தன.

www.tamilarangam.net



"புலிகளின் தாக்குதல் குறைந்து ஓரளவு சகஜ நிலைக்கு திரும்பியிருந்த மட்டக்களப்பை அண்டிய பகுதிகளில் குறிப்பாக கொக்கட்டிச் சோலையில் நடந்த படுகொலை நன்கு திட்டமிட்ட முறையிலேயே நடைபெற்றிருக்கிறது. இதற்கு பதிலடியாக சிங்கள மக்களை படுகொலை செய்வதைவிட இத்தகைய இராணுவ நிலைகளைத் தாக்குவது சிறந்தது தானே? நீ கருதுவது போல் கொழும்பில் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவார் என்றால்; கொழும்பிலை எங்குமே தாக்குதல் நடத்தக் கூடாது" கூத்தர் சற்றுக் கோபமாகவே பதில் சொன்னார்.

"நீர் சொல்லுறதிலையும் நியாயம் இருக்கத்தான் செய்யுது. இவ்வளவு பிரச்சனையளுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியிலை கொழும்பில் கலை நிகழ்ச்சிகளும், **நட்சத்திர** இரவுகளும் நடந்து கொண்டிருக்கிற போது நான் எப்படி அவர்களின் பாதிப்புக்காக வக்காலத்து வாங்கிறது"---- என சோர்ந்து போய்க் கூறினேன்.

"நீ கலைநிகழ்ச்சிகள் என்றவுடன் எனக்கு இங்குள்ள நிலைமைகள் தான் ஞாபகத்துக்கு வருகிறது. அதுபற்றி பிறகு பார்ப்போம். இவ்வளவு பிரச்சனைகளுக்கும் மத்தியிலும் ----" என நீ கவலைப்படுதில் ஓரளவு நியாயம் இருந்தாலும் அது முற்றும் சரியல்ல. ஏனென்றால் எத்தகைய பிரச்சனைகளுக்கும் மத்தியிலும் மக்கள் தமது அன்றாடப் பணிகளையும், தமது கலாச்சாரங்களைப் பேணுகின்ற நடவடிக்கைகளையும் செய்து கொண்டேயிருப்பார்கள், செய்யவும் வேண்டும். 'மக்கள் மரணத்துள் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்' என்பதன் அர்த்தம் இதுதான். அதில் தவறில்லை. எத்தகைய நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள், எதைப் பேண நினைக்கிறார்கள் என்பதில் தான் பிரச்சனையே இருக்கிறது." ஒரு சிறு உரையை நிகழ்த்தி முடித்துவிட்டார் கூத்தர்.

"அப்படியானால் இங்கும் [வெளிநாடுகளில்] கூட கலை வளர்க்கிறார்கள், என்ற வாதமும், கலைச்சேவை செய்கிறோம் என்ற நினைப்பும்

www.tamilarangam.net



சரியென்டா நினைக்கிறீர்?". கூத்தரைச் சீண்டினேன். நான் எதைக் கிளறுகிறேன் என்பதைப்புரிந்து கொண்டு ஒரு புன் முறுவலுடன் தொடர்ந்தார் கூத்தர்.

"இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்துவது ஒருபுறமிருக்க; அதை ஒழுங்கு செய்து நடாத்தும் ஒரு சில நண்பர்களைப்பற்றித்தான் என் கவலை எல்லாம். நடிகைகளை பேட்டி கண்டு, சேர்ந்து போட்டோ எடுத்து அதில் திருப்தி கண்டு அவையும் அவர்களை நினைத்து தான் ...." பெருமூச்சுடன் சொல்லி முடித்தார் கூத்தர். பக்கத்திலிருந்த நண்பரை கூத்தர் எய்த அம்பு நேரடியாக தாக்கியதோ என்னமோ அவரின் முகம் கறுத்ததுடன் சாதுவாக முறைக்கவும் தொடங்கினார். நிலைமை சரியில்லை என்பதை எனக்கு வெளிச்சம் போட்டுக்காட்டியது அவரின் முறைப்பு.

ஞானக் கூத்தர் இப்படித்தான் மனதில் படும் எதையும் பட்டென போட்டுடைத்துவிடுவார். அதுவே அவரது பலமும் பலவீனமுமாக இருக்கிறது. ஒருவாறு பேச்சை திசைதிருப்பி கூத்தரை விடையனுப்புவதற்கான முயற்சிகளில் இறங்கினேன். அவரும் என்னைப் புரிந்தாரோ என்னவோ ஆறிப்போயிருந்த மீதிக் கோப்பியையும் குடித்துவிட்டு விடைபெற்றார். ஞானக்கூத்தர் எனக்கு அறிமுகமானதே இப்படி ஒரு சங்கடமான நிலையில் தான். இலங்கையில் ராஜீவ் காந்திக்கு அடி விழுந்ததுடன் சம்பந்தப்பட்ட சுவாரஸ்யமான விடயம் அது. அதைப் பிறிதொரு சமயத்தில் உங்களுக்கு சொல்கிறேன்.

• நாரதன்

அட்டைப்பட ஓவியம் : சிவா

www.tamilarangam.net



# அமெரிக்காவில் வறுமை

அமெரிக்காவை சாதாரணமாக பார்க்குமிடத்து ஓர் செல்வந்த நாடு. ஆனால் மில்லியன் கணக்கான மக்கள் வறுமையாலும், சுகாதாரவசதியின்மையாலும் அல்லல் உறுகின்றனர். எழுத்தறி -வற்றவர்களின் தொகை அதிகரித்தவண்ணம் உள்ளது. இவ் -வகையான பிரச்சனைகள் சாதாரணமாக மூன்றும் உலகநா -ட்டில் நிலவுவதை காணலாம்.

முப்பத்திரண்டு மில்லியன் வட அமெரிக்கர்களில் 13.6 சதவீதத்தினர் வறுமையால் வாடுகின்றனர். இத்தகவல் Urban Institute 1986ம் ஆண்டு சேகரித்துள்ளது. பெரிய நகரங்களில் வறியவர்களின் தொகை எட்டு மில்லியனைக அதிகரித்துள்ளது.

Wall Street Journal எனும் பத்திரிகையின் தகவலின்படி வருமானத்தின் இடைவெளி பெருகி வரு -கின்றது. 1977 இற்கும் 1988 இற்கும் இடைப்பட்ட ஆண் -டுகளில் செல்வந்தர்களில் 1 சதவீதத்தினரின் வருமானம் 74%. ஆக அதிகரித்துள்ளது. ஆனால் வறியவர்களில் 10%. இனரின் வருமானம் 10%. ஆக குறைந்துள்ளது.

ஆயிரக்கணக்கான நியூயோர்க்வாசிகள் வீடுகளை இழந்து வாழ்கின்றனர். இவ்வகையில் வறிய நியூயோர்க் -வாசிகள் வெற்றுப்போத்தல்களையும், பாவித்த தகரக்கோப் -பைகளையும் சேகரித்து விற்றுப்பெறும் பணத்தில் கொண்டு வாழ்க்கையை ஓட்டுகின்றனர்.

இவ்வறியவர்களில் 6%. இனர் சிறுவர்கள். பெரும்பான்மையான சிறுவர்கள் மனநோயாளிகளாகவும்

www.tamilarangam.net



குற்றவியலில் இருந்து மீளமுடியாதவர்களாகவும், போதை மது போன்றவற்றிற்கு அடிமைகளாகியும் உள்ளனர்.

நியூயோர்க்கில் வீடில்லாதோர்கள் வீதியோரங்களிலும், படிக்கட்டுகளிலும் தொலைபேசி Kabinet-களிலும், வீட்டுவாசல்களிலும் போர்வையினால் தற்காலிக உறைகள் ஏற்படுத்தி தமது இரவு நேரத்தின கழிக்கின்றனர். அமெரிக்க "ஜனநாயகத்தின்" பிறப்பிடமான வெள்ளை மாளிகையின் படிக்கட்டுகள் கூட வீடில்லாதவர்களினால் நிரப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது மைக்கல் ஜாக்சன்களையும், கொலிவூட் படங்களையும் பார்த்து மேற்கத்திய மோகங்களில் அமெரிக்காவை சொர்க்கபுரி எனவும் கற்பனை பண்ணிக்கொண்டிருக்கும் எம்மவர்களுக்கு இந்த தகவல்கள் உண்மையை உணர வைக்குமா ?

தொகுப்பு
ம. நரேந்திரன்

## சுவிஸ்: மீண்டும்! அகதி முகாம் எரிப்பு :-

தூணில் உள்ள Seestrasse (Bern) இல் அமைந்து இருக்கும் அகதிகள் முகாம் சனி அதிகாலை இரண்டு மணிக்கு தீவைப்பிற்குள்ளானது. மோட்டார் சைக்கிளில் வந்த இரு 'புதிய நாசிகள்' பெற்றோல் குண்டினை அகதி முகாமிற்குள் வீசியுள்ளனர். முகாம் எரிவதனை முகாமில் படுத்திருந்த இருவர் கண்டதினால் எதுவித உயிர்ச்சேதமும் இல்லாமல் அகதிகள் தப்பிக் கொள்ள முடிந்தது. ஒரு சிலர் காயமடைந்துள்ளனர். இம் முகாமில் தமிழ் அகதிகளுடன் ஆபிரிக்க துருக்கி நாட்டைச் சேர்ந்த அகதிகளுமாக மொத்தம் நாற்பது பேர் உள்ளனர்.

சுவிற்சலாந்து தனது 700 வது ஆண்டு விழாவை கொண்டாடும் இவ் வேளையில் அகதிகளுக்கெதிரான நடவடிக்கைகளும் அதிகரித்து காணப்படுகிறது.

www.tamilarangam.net



☼ சுவிஸ்

## ZUG இல் நடந்தது என்ன ?

சென்ற மாதம் Zug மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கு நிதி கொடுக்க மறுத்தவருக்கு அடியும், அதையொட்டி நியாயம் கேட்க சென்றவருக்கு கத்திக்குத்தும் நிகழ்ந்துள்ளது. Zug மாவட்டத்தில் நிதி சேர்க்கும் புலி உறுப்பினர் மேற்படி கத்திக்குத்துக்குள்ளானவரின் நண்பர் ஒருவரை, புலிகளுக்கு நிதி தரும்படி வற்புறுத்தி வந்ததாகவும் அவர் கொடுக்க மறுத்து வந்தாலும் புலி உறுப்பினர் சம்பவதினத்தன்று அவரை அடித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. இதற்கு நியாயம் கேட்கப் போனவர்கள் கதைப்பதற்கு முன்பே அவர்கள் மீது கத்திக்குத்து நிகழ்ந்து விட்டது.

இந்த சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் குடி போதையில் இருந்ததாக சொல்லப்பட்டாலும், ஒரு கத்திக்குத்தை நிகழ்த்தும் அளவுக்கு புலி உறுப்பினரை ஆட்கொண்டிருந்த குரோத உணர்வைத் தான் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். இந்த குரோத உணர்வு தனிப்பட்ட பிரச்சனைகளின் அடிப்படையில் அல்ல. மாறாக விடுதலைப்புலிகளுக்கு காசு தராமல் இருப்பவர்கள் தேசபக்தி அற்றவர்கள் என்ற புலி உறுப்பினர்களின் எண்ணத்தின் பிரதிபலிப்பே ஆகும்.

மனிதம் 9ல் ஆசிரியர் தலையங்கத்தில் "வளைகுடா யுத்தத்தின் மூலகர்த்தாவான சதாம் குசேன்" என்று குறிப்பிட்டது பற்றி வளவன் என்ற வாசகர் சுட்டிக்காட்டியிருந்தார் எமது கவனக்குறைவால் இடம் பெற்ற இத்தவறுக்கு சுயவிமர்சனம் ஏற்கின்றோம். - ஆர்-குழு -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மட்டப்படுத்தல்

** சிகன் **

மனித காலம்
தலைமயிரின் உச்சியிலும் நகம் வளர்த்து
ஊர்ந்தது
பூச்சூடி வருமுன்னே
வாழ்வை ரசித்து முடிக்கத் துடித்தது பறவை
தமிழில்
விலங்காய் மட்டுமே உணரப்பட்ட ஒன்று
உடலைத் தின்று
இறக்கைகளைப் போட்டது
சட்டையைக் கழற்றி
இறக்கைகளைப் பொறுக்கினேன்
இந்தகம் சுகந்து வளர்ந்த
நீர்முள்ளிச் செடிகளை
அடிமண் வெட்டிக்கொண்டு
பெயர்த்தக் கொடுத்தேன்.

---

இரண்டாவது ஆண்டு நினைவுகளுடன் ....



**விமலேஸ்வரன்**
(யாழ். பல்கலைக்கழக மாணவன்)

இந்த மரணத்திற்கு எல்லா மனிதர்களும்
பதில் சொல்லட்டும்!
வெற்றுக் காற்றும் வெறும் பூமியுமாய்
அவர்கள் ஆளட்டும்!!

www.tamilarangam.net



# நட்சத்திரங்களும் இறந்த மனிதனும்

சேரன்



இப்போது தான் தகவல் வந்தது. தொலைபேசியின் அடுத்த முனையில், குரல் நடுங்க அவள் சொன்னாள்.

"சிவரமணி தற்கொலை செய்து விட்டாள்" சொன்ன மறுகணமே தொலைபேசி மறு முனையில் அழுகையில் நிர்த்துப் போயிருக்க வேண்டும்.

சிநேகிதியும், நல்ல ஆத்மார்த்தமான கவியும் பெண் நிலை வாதியுமான சிவரமணி ஏன் தற்கொலை செய்து கொண்டாள்? அவளுடைய தற்கொலைக்கு ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? இந்தக் கேள்விகளுக்குரிய பதில்களுக்காக "அறிவு" அந்தரப்பட்டுக் கொண்டிருக்கிற வேளை சிலைக் கேள்விகளாகவும் பல முளைக்கலாயின.

கவிதைக்கும் சுய அழிப்பிற்கும் அப்படி என்னதான் உறவோ?

சாப்பிடு. தூங்கு, மல்லுகழி. வேலைக்குப் போ. உயிர்மீது ஆசையிருந்தால் குறுக்கிடாதே.

என்று எழுதிய தமிழகக் கவி ஆத்மாநாம் கிணற்றுள் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார் சில வருடங்களுக்கு முன்பு.

இத்தனையாம் திகதி இத்தனை மணிக்கு இறந்து போவேன் என்று எழுதி வைத்து விட்டு, எழுதியபடியே தற்கொலை செய்து கொண்டார் அமெரிக்கப் பெண் கவியான சில்வியா பிளாத். தன்னுடைய கவிதையொன்றில் சூரியனைத் தேநீர் பருக அழைத்த மாயா கோவ்ஸ்கி, அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டு விட்டு, எல்லா யன்னல் திரைகளையும் இறக்கி இருளைப் பரப்பிய பிற்பாடு தன்னைத்தானே சுட்டுக் கொண்டு இறந்து போனார்.

அவருடைய கடைசிக் கவிதைக் குறிப்பில்: "தேங்கிப் போன யதார்த்தத்தில் மோதி நொருங்கியது காதல் படகு"

வாழ்வு நானும் பிரிந்தனம் என்று எழுதியிருந்தாலும் மயாகோவ்ஸ்கியின் இறப்புக்கான பழியை யார் பொறுப்பு எடுத்துக் கொள்வது என்பதில் வீரா என்ற மாயாகோவ்ஸ்கியின் காதலியும் ஸ்டாலினிசத்தின் "கலாசாரக் கொமிசார்த்தனமும்" தம்முள் போட்டியிட்டுக் கொண்டன.

மே மாதம் 19 ஆம் திகதி சிவரமணி தன்னுடைய அறைக்குள் சென்று தீர்மானகரமாகக் கதவை தாழிட்டுக் கொண்ட பிற்பாடு நச்சுக் குளிகையை விழுங்கி உயிரை மாய்த்துக் கொண்டார். அதற்கு முன்பாக, தான் எழுதிய எல்லாக் கவிதைகளையும் எரித்து விட்டிருந்தார். இப்போது மிஞ்சியிருப்பதெல்லாம் நண்பர்களிடம் எஞ்சியுள்ள ஏழெட்டுக் கவிதைகளும் யாழ்ப்பாணம். பெண்கள் ஆய்வு வட்டம் வெளியிட்ட "சொல்லாத சேதிகள்" தொகுப்பில் இடம் பெற்றுள்ள அவரது கவிதைகளும் தான்.

ஒரு தீவிரமான பெண்ணுரிமை வாதியாக இருந்த சிவரமணியும் எல்லாப் பெண் நிலை வாதிகளையும் போலவே ஆண் மேலாதிக்கமுள்ள இச் சமூகத்துடன் முரண்பட்டார். அவருடைய நியமனங்களுக்கும் – இறுகிப்போன, கலாசாரத்தளைகளால் பெண்மையைச் சிறுமைப் படுத்துகிற பாரம்பரியத் தமிழ்ச் சமூக அமைப்புக்கும் அதன் கலாசார நியமங்களுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டன. இந்த முரண்பாடுகளையும், அதன் விளைவாக பெண் நிலை அனுபவங்களில் ஏற்படுகிற பாதிப்பும் சிவரமணியின் கவிதைகளில் முற்றிலும் புதிய வகையில் வெளிப்பட்டன. பெண் நிலைப்பட்ட ஆக்க இலக்கிய விமர்சனங்களில் இப்போது குறிப்பாகவும், முற்றிலும் வேறுபட்ட வகையிலும் சொல்லப்படும் "பெண்களது வாழ்வு அநுபவம் வித்தியாசம்: அது வெளிப்படுத்தப்படும் முறைமையும், மொழிப்பாவனையும் கூட வித்தியாசம்" எனும் கருத்துக்கு சிவரமணியின் கவிதைகள் அற்புதமான உதாரணம். லேக்கன் எனும் உளவியலாளர் சொல்வது போல கவிதைகள் எழுதும் பெண்கள் முகம் கொடுக்கும் முக்கியமான பிரச்சினை அவர்கள் கலாசாரத் தளைகளை

சிவரமணி



எதிர்த்து மட்டுமல்ல மொழியியல் ரீதியான ஒடுக்குமுறையையும் எதிர்த்தும் போராட வேண்டியிருக்கிறது. இந்த அம்சமே அவர்களுடைய கவிதைகளுக்கும் பல சந்தர்ப்பங்களில் ஒருவகைக் கசப்பான தன்னுணர்வை ஊட்டுகிறது.

www.tamilarangam.net

இன்னொரு புறத்தில் சிவரமணியின் தற்கொலை பெண் ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு பயங்கரமான சுய – எதிர்ப்பாகவும் அமைகிறதென்பதையும் மிகவும் தயக்கத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது. தாய்மார் தற்கொலை செய்வது அல்லது மகள் தற்கொலை செய்வது என்ற நிலை சமூகத்தில் பல தளங்களிலும் இருந்து வந்திருக்கிறது. எனினும் உறுதியான சிந்தனையும் தெளிவான கவிதை மொழியும், துடிப்பும் ஒருங்கே அமையப் பெற்று தமிழ்க் கவிதையின் புதிய பெண் நிலைவாத நம்பிக்கையாக விளங்கிய சிவரமணியின் இந்த முடிவை அறிவு பூர்வமாக ஏற்றுக் கொள்ள முடியாமலிருக்கிறது.

மாயாகோவ்ஸ்கியின் தற்கொலைக்குப் பிறகு அவருடைய நண்பரும் புகழ்பெற்ற மொழியியலாளருமான றோமன் ஜக்கோப்ஸன் மாயாகோவ்ஸ்கி பற்றி எழுதுகிறபோது அவர் நீண்ட காலமாகவே தற்கொலை பற்றிய எண்ணத்திலிருந்தார் என்றும் அவருடைய உணர்வுச் செறிவும் வீச்சும் மிக்க கவிதைகளில் இந்தத் தற்கொலை மனைப்பாக்கம் தெரிகிறது என்று குறிப்பிடுகிறார்.

சிவரமணியின் கவிதைகளை இப்போது திருப்பிப் படிக்கிறபோது றோமன் ஜக்கோப்ஸன் மாயாகோவ்ஸ்கி பற்றி எழுதியது ஞாபகம் வருவதைத் தவிர்க்க முடியவில்லை. ஆரம்பத்தில் மனைப்பு என்ற கவிதையில்,

நான் வாழ்ந்தேன்
வாழ்நாளெல்லாம் நாளாக
இருள் நிறைந்த
பயங்கரங்களினூடாக
நான் வாழ்ந்தேன்
இன்னும் வாழ்கிறேன்

என்று எழுதிய அதே சிவரமணிதான் பின்னர், அசாதாரணமான படிமங்களுக்குத் தாவுகிறார். "யுத்த கால இரவொன்றின் நெருக்குதல் நமது குழந்தைகளை வளர்ந்தவர்களாக்கிவிடுகிறது" என்கிறார். "புத்திசாலியான கடைசி மனிதனும் இறந்து போகிறான் என்று இன்னொரு கவிதையில் எழுதுகிறார்.

மற்றொரு கவிதையில், "நட்சத்திரங்கள் இறந்து போனவரின் கண்களைப் போல இருக்கின்றன" என்று பாரம்பரியமான உவமையை துவம்சம் செய்து விடுகிறார். பெண்மைக்கும் பெண்களின் கண்களுக்கும் காலம் காலமாக உவமிக்கப் பட்ட நட்சத்திரங்களை இறப்புக்கும் நிலையாமைக்கும் சின்னமாக சிவரமணி தன்னுடைய கவிதையில் மாற்றுகிற தன்மை— வழமையான உவமைத் தடங்களில் மென்மை, மலர், தாரகை, இதழ், கொடி போன்ற அம்சங்களை பெண்மையுடன் மட்டுமே தொடர்பு படுத்தி வந்த ஒரு இலக்கியம் பாரம்பரியத்தை (இதில் ஆண்களே ஆட்சியுற்றிருந்தனர் — ஆண்டாள் மட்டுமே விதிவிலக்கு எனலாம்) ஒரு சிறு உவமை மூலமே தகர்த்து விடுகிறார்.

பேசாப் பொருளைப் பேசுவதும், பாரம்பரியமாகப் பேசப்பட்டவற்றை அதே மாதிரிப் பேசாமல் புதுப்பித்துப் பேசுவதும் கலை இலக்கியங்களைச் செழுமைப்படுத்தும். சிவரமணியின் கவிதைகள் சிறு தொகுப்பாகவேனும் வெளிவர முடிந்தால் அவருடைய முக்கியத்துவம் மேலும் உணரப்படும்.

நன்றி: வீரகேசரி

Nur Für Freundkreis

புதிய சந்தா விபரம்

தனிப்பிரதி · 3 Sfr.

ஒருவருடம் · 22 Sfr.

ஐரோப்பியநாடுகள் · 25 Sfr.

(தபால் செலவு உட்பட)

வாசகர்களே!

விமர்சனங்களையும்

ஆக்கங்களையும்

வரவேற்கிறோம்!

· ஆர் · குழு ·

வங்கிக் கணக்கு இல:

SPAR KONTO : 0094- 157146- 60- 1

வங்கி முகவரி:

BÜCHER VERKAUF"

SCHWIZERISCHE KREDITANSTALT

SWITZERLAND

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வேட்டை

இளைய அப்துல்லாஹ்
(இலங்கை)

கறுத்த துப்பாக்கி
தோளில் கனக்க
வேட்டையைத் தேடி
கானகம் சென்ற
வேட்டைக் காரனுக்கு
பெருத்த ஏமாற்றம்!
ஏனெனில்
மிருகங்கள் அவனைப்பார்த்து
சிரித்தன
வேட்டைக்காரனே
வேண்டாம் ..... போ!
உன் கிராமத்திற்கு
உயிர்வதைக்கு இங்கே
ஏன் வரவேண்டும்?

உன் கிராமத்தில்
இன்று இரவு ... நடந்ததே
பெரு வேட்டை - அங்கே
மனித உயிர்களை
வேட்டையாடிவிட்டு
உடல்களைப் பரத்திவிட்டு- சில
வேட்டைக்காரர்கள் போகிறார்கள்
போ — இனி அவற்றை எடுத்து
உன் குடும்பமும் சுற்றமும்
ருசித்துப் பாருங்கள் !

ஏனெனில்
மிருகச் சதையை
தொடர்ந்து சுவைத்த
உங்கள் நாக்குகள்
மனிதச் சதைகளையும்
சுவைத்துப் பார்க்கட்டும்.
ஆமாம்
கோபப்படாதே!
ஏனெனில்
இப்போ
மனிதர்களும்
வேட்டைப் பிராணிகள்போலத்தான்
சுடுவதும் ....
பரத்துவதும் ....